வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 16.07.2025 புதன்கிழமை இதழ் : 197 பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# வடக்கு காணிகளை விடுவிக்கக்கோரி ஜனாதிபதி செயலகம் முன் போராட்டம்

கொழும்பு, ஜூலை 16

**வடக்கில் படையினர் வசமுள்ள காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக அமைதிவழி போராட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக் கப்பட்டது.**

"எமது பூர்வீக நிலத்தை எம்மிடம் மீளக் கையளியுங்கள்" என்ற கோஷத்துடன் நேற்று காலை 9.30 மணி தொடக் கம் சுமார் ஒரு மணி நேரம் இந்தப் போராட் டம் வலி. வடக்கு மக்க ளால் முன்னெடுக்கப்பட் டது.

போராட்டத்தில் பங் கேற்றவர்கள், "1999இல் வழிபடச் சென்றபோது இருந்த பலாலி புனித செபஸ்தியார் ஆலயம் இப்போது எங்கே?", "எமது நிலங்களே எமது வாழ்க்கை", "ஒன்றாய் எழுவோம்", "எமது பூர் வீக நிலத்தை மீள எம்மி டம் ஒப்படையுங்கள்", "எமது வாழ்வாதாரத்தை சூறையாடாதீர்கள்", "ஜனாதிபதி அவர்களே! நீதிக்கான எம் கண்ணீரை நீங்கள் இன்னமும் பார்க்க வில்லையா?", என்று எழு தப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

போராட்டத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு எழுதப் பட்ட பகிரங்கக் கோரிக் கைக் கடிதமும் வழங்கப் பட்டது.

அந்தக் கடிதத்தில், "தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவின் வலிகா மம் வடக்கு பகுதி மக்கள் அனைவரும் போரின் விளைவாக 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த னர். 2009ஆம் ஆண்டு நடுப்பகுதியில் போர் முடி வுக்குக் கொண்டுவரப் பட்டு, 2010ஆம் ஆண்டு மீள்குடியேற்ற நட வடிக்கைகள் 11



## உச்சம் தொட்டது பங்குச் சந்தை!

கொழும்பு, ஜூலை 16

கொழும்பு பங்குச் சந் தையின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் (ASPI) நேற்று செவ்வாய்க் கிழமை வரலாற்றில் முதன் முறையாக 19,000 புள்ளி களை கடந்துள்ளது.

நேற்றுமுன்தினம் வர்த்தக நாள் முடிவில், 18,838.39 புள்ளிகளாகப் பதிவாகியிருந்த அனைத்து பங்கு விலைச் சுட்டெண், நேற்று வர்த்தக நாள் ஆரம்பத்தில் வரலாற்றில் முதன்முறையாக 19,000 புள்ளிகளை கடந்ததாக கொழும்பு பங்குச் சந்தை தெரிவித்தது.

இதன்படி, கொழும்பு பங்குச் சந்தையின் மொத் தப் புரள்வானது நேற்று 129 கோடி ரூபாயாக பதி வானது. (ஐ)

## போர் முடிந்த பின்னும் காணிகளை அரசு வைத்திப்பது பெரும் குற்றம்!

### கஜேந்திரகுமார் எம். பி. சாடல்

கொழும்பு, ஜூலை 16

போர் முடிந்து 16 வருடங்கள் கடந்த பின்னரும் அதியுயர் பாது காப்பு வலயம் என்ற போலியான சட்டவிரோதமான கட்டமைப்பு களைத் தொடர்ந்தும் தக்க வைத்து பாதிக்கப்பட்ட சாதார ண தமிழ் மக்கள் தமது சொந்தக் காணிக்கு திரும்பிப் போகமுடி யாத நிலை உள்ளது. இதற்கு இந்த அரசும் இதற்கு முதல் இருந்த அரசுகளும் வைத்திருப்பது உண் மையில் ஏற்றுக்கொள்ள முடி யாத பெரும் குற்றம் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணி யின் பாராளுமன்ற 11

## பயங்கரவாத சட்டத்தில் கைது: 9 மாதங்களின் பின்னர் இளைஞருக்கு பிணை!

கொழும்பு, ஜூலை 16

இஸ்ரேலுக்கு எதிராக சமூக ஊட கங்களில் பதிவு இட்டமைக்காக கைது செய்யப்பட்டு, 9 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த 21 வயது இளைஞ ருக்கு கல்கிசை மேலதிக நீதிவான் நீதி மன்றம் பிணை வழங்கியுள்ளது.

சந்தேகநபரான முகமது ரிபாய் முக மது சுஹைல் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கடந்த 11

## அமெரிக்க வரியை 20 வீதமாக குறைப்பதற்கு தீவிர முயற்சி!

கொழும்பு, ஜூலை 16

அமெரிக்காவின் தீர்வை வரியை 20 சதவீதமாகக் குறைப்பதற்கு அரசாங்கம் தீவிர முயற்சிகளை எடுத்துள் ளது என்று வர்த்தக பேச்சுகளுடன் தொடர்புடைய தரப்புகள் தெரிவித்துள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இலங்கை உற்பத்திகளுக்கு 30 சதவீத வரியை விதித்துள் ளார். இது முன்னர் முன்மொழியப்பட்ட 44 சத வீத வரியிலும் பார்க்க குறைவாகும். இந்த வரி குறைப்பை அரசாங்கம் ஒரு சாதனையாக கருதினாலும் அமெ ரிக்காவுடன் வர்த்தகத்திலுள்ள மற்ற 11

## இந்திய மீனவர் அத்துமீறல்: "கட்டுப்படுத்த முடியாதுவிடின் பொறுப்பை மீனவரிடம் விடுக"

மன்னார், ஜூலை 16

தற்போது வடபகுதி கடற்பரப்பில் அதிகரித்துள்ள இந்திய மீனவர்களின் அத்துமீறலையும் சட்டவிரோத கடற்றொழில் செயல்பாடுகளையும் கடற்படையால் கட்டுப்படுத்த முடியவில்லையெனில் முதல்வன் திரைப் பட பாணியில் அந்தப் பொறுப்புகளை ஒரு மாத காலத் துக்கு வடக்கு மீனவர்களிடம் ஒப்படையுங்கள் - இவ்வாறு கூறியுள்ளார் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன். 11

## உடைந்தது வட்டுவாகல் பாலம் திருத்தும் பணி இன்று ஆரம்பம்

முல்லைத்தீவு, ஜூலை 16

முல்லைத்தீவு நகரத்துக்கு நுழையும் வட்டுவாகல் பாலம் நேற்றைய தினம் உடைந்ததாக முல்லைத்தீவு மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது.

உடைந்த வட்டுவாகல் பாலத்தின் திருத்தப் பணிகள் இன்று காலை முதல் மேற்கொள்ளப்படவுள்ளது. இத னால், இந்தப் பாதையூடான போக்குவரத்து இன்று காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 3 மணி வரை முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் 11

## வெள்ளியன்று அமெரிக்கா செல்கின்றது அரசாங்க குழு

கொழும்பு, ஜூலை 16

அமெரிக்க ஜனாதிபதி அறிவித்துள்ள 30 சதவீத தீர்வை வரி குறித்துப் பேசுவதற்காக எதிர்வரும் வெள் ளிக்கிழமை அரச குழு அமெரிக்கா செல்லவுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரி வித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடந்த நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் ஹேரத், "இலங்கை ஏற்றுமதிகளில் கூடுதல் வரிச் சலு கைகளைப் பெறுவதற்கான முயற்சியாக ஓகஸ்ட் முதலாம் திகதி காலக்கெடுவுக்கு முன்னதாக 11

## தேர்தல் வாக்குறுதியின்படியே அரசாங்கம் செயல்படுகின்றது

### அமைச்சரவை பேச்சாளர்

கொழும்பு, ஜூலை 16

தெரிவு செய்யப்பட்ட வாக்குறுதிகளை தொகுத்து அவற்றில் ஒன்றை மாத்திரமே ஜனாதிபதி நிறைவேற்றி யுள்ளார் என்று குறிப்பிடுவது எந்தளவுக்கு நியாயமா னது. மக்களுக்கு வழங்கிய தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு அமைவாகவே செயல்படுகிறோம். கொள்கை மாதிரிக்கு புறம்பாக செயல்படவில்லை என்று அமைச்சரவை பேச் சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரி வித்தார். 11

## எதிர்க்கட்சிகள் இணைந்து அரசை தோற்கடிப்போம்!

### நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்கிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜூலை 16

எமது கட்சியில் ஏற்பட்ட பிளவு காரணமாகவே தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தது. இந்த அரசாங்கம் ஒரு தவணை அரசாங்கமாகும். அடுத்த தேர்தலில் அரசாங்கத்தை தோற்கடிப்போம். அதற்காக எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயல்பட நடவடிக்கை எடுத்து வருகிறோம் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளு மன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா 11

## மாகாண சபைகள் தேர்தலை நடத்தாதிருப்பது மோசமானது

### சமூக நீதிக்கான தேசிய இயக்கம்

கொழும்பு, ஜூலை 16

தேசிய இனப் பிரச்னைக்கு தீர்வு கோரி வரும் மக்க ளின் அபிலாசைகளை கருத்தில் கொண்டு நோக்குகை யில் மாகாண சபைகள் தேர்தலை நடத்தாது இருப்பது மிக மோசமான நிலைமையாகும் - இவ்வாறு சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்படி விடயம் வலியுறுத் தப்பட்டுள்ளது. 11

உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குத்தொடுவாய் புதைகுழி:

# 12 - 53 வயதினர் சுடப்பட்டும் வெடிவைத்தும் மரணமாகினர்

முல்லைத்தீவு, ஜூலை 16

**கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட 52 எலும்புக்கூடுகள் 12 முதல் 53 வயதுக்கு இடைப்பட்டவர்களுடையவை. இவர்கள் சுடப்பட்டும் வெடிப்பு காயங்களாலும் உயிரிழந்தனர் என்று பகுப்பாய்வு அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.**

அகழ்வில் கண்டெடுக்கப்பட்ட பகுப்பாய்வு அறிக்கை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் விவரம் வருமாறு,

எலும்புக்கூடுகளாகத் தோண்டி எடுக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர், வெடிப்புக் காயங்கள், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர். மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளில் 31 பெண்களுடையவை, 21 ஆண்களுடையவை.

12 முதல் 53 வயது வயதுக்கு இடைப்பட்டவர்களே இவ்வாறு உயிரிழந்தனர். 32 பேரின் உயிரிழப்புக்கு வெடிப்புச் சம்பவம் அல்லது வெடிப்புக் காயம் காரணமாகவுள்ளது. அத்துடன், துப்பாக்கிச்சூட்டுக் காயத்தால் 7 பேர் உயிரிழந்தனர். வெடிப்புச் சம்பவம் மற்றும் துப்பாக்கிச்சூடு காரணமாக 12 பேர் உயிரிழந்தனர்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி கடந்த ஆண்டு ஜூன் 29 ஆம் திகதி அடையாளம் காணப்பட்டது. முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பிரதான வீதியோரத்தில், குழாய் நீர் பொருத்தும் நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப்பணிகளின் போது இந்த மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கடன் வாங்கியவரை சித்திரவதை செய்த நால்வருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 16

கந்துவட்டி அறவிடும் தொழில் நடத்திய நால்வரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் விளக்கமறியலில் வைத்துள்ளது.

வட்டிக்கு பெற்ற கடனை கொடுக்கத் தவறியமைக்காக ஒருவரை மூவருடன் இணைந்து இளவாலைக்கு கடத்திச் சென்று, நிர்வாணமாக்கி அவரை மோசமாகத் தாக்கி சித்திரவதைகளுக்கு உட்படுத்தியதுடன், அந்த சம்பவத்தை கைபேசியில் காணொலியாக பதிவு செய்துமிருந்தனர். இதைத் தொடர்ந்து கடன் பெற்றவரை மிரட்டி விடுவித்தனர்.

பாதிக்கப்பட்டவர் தனக்கு நேர்ந்த கொடுமைகளை காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடாக பதிவு செய்தார்.

இதன்படி, காங்கேசன்துறை பொலிஸார் குடும்பஸ்தரை கடத்தியமை, சித்திரவதை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் கந்துவட்டிக்கு பணம் கொடுத்தவர் உட்பட நால்வரை கைது செய்தனர்.

கைதான நால்வரும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதேவேளை, சித்திரவதை மற்றும் தாக்குதலை காணொலியாக பதிவு செய்ய பயன்படுத்தப்பட்ட கைபேசிகளை பகுப்பாய்வு செய்யவும் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த வருடமும் இதே போன்று, மருதனார்மடத்தில் கந்து வட்டிக்கு பணம் பெற்ற ஒருவர் கடத்தி, நிர்வாணமாக்கி, தாக்கப்பட்டார். இது தொடர்பில் வெளியான சமூக வலைத்தள காணொலிகளை அடிப்படையாக வைத்து சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பயங்கரவாத சட்டத்துக்கு எதிராக கிளிநொச்சியில் நேற்று போராட்டம்!

கிளிநொச்சி, ஜூலை 16

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்து திரட்டும் நடவடிக்கை கிளிநொச்சி பொது வர்த்தக சந்தை நிலையத்துக்கு முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"இன்னுமோர் அடக்குமுறை சட்டம் வேண்டாம்", "பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்து செய்", "காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் இப்போதாவது நீதி வழங்கு", "அனைத்து தேசிய இனங்களுக்கும் சம உரிமைகளை உறுதி செய்யும் புதிய அரசமைப்புக்காகப் போராடுவோம்", உள்ளிட்ட கோரிக்கைகள் இதன்போது வலியுறுத்தப்பட்டன. (ஐ)

# சிவபூமி திருவாசக அரங்க மண்டபம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

"சிவபூமி திருவாசக அரங்க மண்டபம்" நாவற்குழி திரு வாசக அரண்மனை வளாகத்தில் நேற்று முன்தினம் திங்கட் கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டது.

மருத்துவர் சண்முகநாதன் - அருந்ததி தம்பதியர் நினைவாக மருத்துவர் மனோமோகன் - சிவகௌரி தம்பதியரால் நிறுவப்பெற்ற இந்த அரங்கம் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு. திரு முருகன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

அரங்க மண்டபத்தை மருத்துவர் மனோமோகன் - சிவகௌரி தம்பதியர் திறந்து வைத்தனர். இந்த நிகழ்வில், விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாய கன், யாழ்ப்பாண பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா ஆகி யோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில், சிவபூமி திருவாசக அரங்க மண்டப திறப்பு விழா மலரும் வெளி யிட்டு வைக்கப்பட்டது. (ஐ-03)






## வல்வெட்டித்துறையில் 74 பேர் இரத்த தானம்!

வடமராட்சி, ஜூலை 16

வல்வெட்டித்துறை இரத்த தான சங்கம், வல்வெட்டித்துறை பிரதேச அரசினர் மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங்கத்தின் அமுத விழா (80 ஆண்டுகள்) முன்னிட்டு நடத்தப்பட்ட இரத்த தான நிகழ்வில் 74 பேர் குருதி தானம் வழங்கினர்.



இந்த குருதிக் கொடை முகாம் கடந்த ஞாயிற்றுக் கிழமை நெடியகாடு தனி யார் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில், 15 பெண்கள், 59 ஆண்கள் என 74 பேர் குருதி தானம் செய்தனர். (ஐ-02)

## ஹரக் கட்டாமீதான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜூலை 16

"ஹரக் கட்டா" என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்கிரமரத்னவுக்கு எதிரான வழக்கு மீதான சாட்சிய விசாரணையை எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

கொழும்பு - மீதொட்டமுல்லையில் வீடு ஒன்றில் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பான சாட்சிய விசாரணையே இவ்வாறு ஒத்தி வைக்கப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன முன்னிலையில் இந்த வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது சிறைச்சாலையில் உள்ள "ஹரக் கட்டா" பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதேவேளை, இந்த வழக்கு மீதான சாட்சிய விசாரணை எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

# பரிந்துரைகளை அமுல்படுத்தாத அதிகாரிகளின்மீது நடவடிக்கை!

### இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

கொழும்பு, ஜூலை 16

தமது நிறுவனம் வழங்கும் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தாவிட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவால் வழங்கப்படும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அனைவரும் கட்டுப்பட்டுள்ளனர். இது தொடர்பில் 17/2005 மற்றும் 2005 ஒக்ரோபர் 05ஆம் திகதி அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், மாகாண சபை பிரதான செயலாளர்கள், திணைக்களங்களின் பிரதானிகள், கூட்டுத்தாபனம் தெளிவுபடுத்துவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்ட பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் குறித்த பரிந்துரைகளை நடைமுறைப் படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆணைக்குழுவுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

எவ்வாறாயினும், இது தொடர்பில் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையால் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதில்லை என ஆணைக்குழுவின் சில நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஆணைக்குழுவின் சட்டத்துக்கு உட்பட்டு வழங்கப்படும் பரிந்துரைகளுக்கு அமைய மீள மேன்முறையீடு செய்யும் நடைமுறை இல்லை. மேன்முறையீட்டை சமர்ப்பித்து பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமல் இருப்பது சட்டத்துக்கு முரணானது எனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

குறித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாவிட்டால் அதற்கு எதிராக ஆணைக்குழு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நிறுவனங்களும் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
16.07.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 32

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்கின்றனர்?

தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தலில் வெற்றி பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றனர்? அவர்களில் சிலர் - குறிப்பாக, வடக்கில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறீதரன், கிழக்கில் சாணக்கியன் ஆகியோர் தாங்கள் இருக்கிறோம் என்பதை அவ்வப்போது காண்பித்துக் கொள்கின்றனர்.

இவர்களில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்றத்தில் பேசுவதற்கு அப்பால் தன்னால் முடிந்த - தான் நம்புகின்ற சில விடயங்கள் தொடர்பில் செயல்படுகிறார். ஆனால், ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்கின்றனர் - ஊருக்குள்தான் இருக்கின்றனரா என்று கேட்குமளவுக்கு அவர்களை மக்கள் தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது.

ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்பவர் பாராளுமன்றம் செல்வது (அதிலும் பலர் பேசுவதுகூட இல்லை) மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் பங்கு கொள்வது என்பதுடன் தமது பணி முடிந்து விடுவதாகவே பலரும் எண்ணிக் கொள்கின்றனர்.

இவற்றுக்கு அப்பால் மக்களின் அன்றாட வாழ்வியல் பிரச்னைகள் தொடர்பில் அவர்களோடு உரையடுவது, அரசாங்கத்தை குற்றஞ்சாட்டிக் கொண்டிருப்பதற்கு அப்பால் தூதரகங்கள் - ஏனைய தொண்டு நிறுவனங்களை அணுகி மக்களின் பிரச்னைகளை முடிந்தவரையில் தீர்த்து வைப்பதற்கான பணிகளை முன்னெடுப்பதென எப்போதும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்பவர் மக்கள் மத்தியில் இயங்கிக் கொண்டிருப்பவராக இருக்க வேண்டும். வாக்களித்த மக்களை நேரில் சென்று, கிரமமாக சந்திக்க வேண்டும். ஆனால், தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள் என்போர் பலர் மக்கள் முன்னால் தோன்றுவதை அச்சத்துடன் நோக்குபவர்களாகவே இருக்கின்றனர்.

தமிழ் மக்களின் நிலைமையை ஒரு வரியில் கூறுவதனால் அரசியல் ரீதியான முன்னேற்றமும் இல்லை - அபிவிருத்தி ரீதியான முன்னேற்றமும் இல்லை. மொத்தத்தில் “இலவுகாத்த கிளி“ என்று கூறுவதற்கு ஒப்பானதுதான் ஈழத் தமிழினத்தின் இன்றைய நிலைமை. இதற்கு அரசியல்வாதிகள் மட்டும்தான் காரணமா - வாக்களித்த மக்கள் காரணமில்லையா?

தமிழ் வாக்காளர்களே இந்த விடயத்தில் பிரதான குற்றவாளிகள். வாக்களிக்கும்போது வேட்பாளர்களின் தகுதி - ஆளுமையை கருத்தில் கொண்டு வாக்களித்திருந்தால் பின்னர் அரசியல்வாதிகள்மீது குற்றம் சுமத்த வேண்டிய அவசியம் ஏற்படாது. ஆனால், சாதி, ஊர் பின்னணியின் அடிப்படையில் வேட்பாளர்களை தெரிவு செய்யும்போது ஆளுமையுள்ளவர்கள் பாராளுமன்றம் செல்லமாட்டார்கள். இன்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பிரதேச சபைகளில் இருக்க வேண்டியவர்கள். இதன் காரணமாகத்தான் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்கின்றனர் என்னும் கேள்வியை முன்வைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

அரசியல் தொடர்பில் தமிழ் சமூகத்தின் மத்தியில் பரந்தளவிலான விழிப்புணர்வு அவசியம். அரசியலில் யதார்த்தபூர்வமான மாற்றங்கள் வேண்டுமென்று எண்ணுபவர்கள் மக்களை அறிவூட்டும் பணிகளை முன்னெடுக்க வேண்டும். வெறுமனே கடந்தகாலம் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதும் தேசத்தைத் திரட்டுகிறோம் என்னும் உணர்ச்சி சுலோகங்களால் தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாக்க முடியாது. கடந்த பதினாறு வருடங்கள் இதனை தெளிவாக நிரூபித்திருக்கின்றன.

# அடைக்கப்பட்ட தே. எண்ணெயே இனி சந்தைகளில் விற்பனையாகும்

## அமைச்சரவை பத்திரம் தயாராகிறது

கொழும்பு, ஜூலை 16

உள்ளூர் சந்தையில் போத்தல் அல்லது கொள்கலனில் அடைக்கப்பட்ட தேங்காய் எண்ணெயை மாத்திரமே விற்பனை செய்ய அனுமதிக்கும் புதிய அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்பட்டு வருவதாக தேங்காய் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சாந்த ரணதுங்க தெரிவித்தார்.

சந்தையில் தேங்காய் எண்ணெயின் தரத்தை ஒழுங்குபடுத்த இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

“எதிர்காலத்தில் தேங்காய் எண்ணெயை பை, பழைய கொள்கலன்களில் விற்பனை செய்யப்படுவது சட்டவிரோதம் என்று அறிவிக்கப்படவுள்ளது. சோதனைகள் நடத்தப்பட்டு விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக நுகர்வோர் விவகார அதிகார சபையால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்”, என்றும் அவர் கூறினார்.

உற்பத்தியாளர்கள் மற்றும் சில்லறை விற்ப னையாளர்கள் புதிய விதிமுறைகளை கையாள் வதற்கு 06 முதல் 08 மாதங்கள் அல்லது ஒரு வருடம் வரை கால அவகாசம் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# இந்த ஆண்டில் இதுவரை 12 இலட்சம் சுற்றுலாவிகள்

கொழும்பு, ஜூலை 16

2025 ஜனவரி முதலாம் திகதியில் இருந்து ஜூலை 13ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 12 இலட்சத்து 47 ஆயிரத்து 815 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, நடப்பு மாதத்தின் முதல் 13 நாட்களில் 79,771 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த ஆண்டில் அதிகளவான சுற்றுலா பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர். அங்கிருந்து, 2 இலட்சத்து 58 ஆயிரத்து 323 பேர் வருகை தந்துள்ளனர்.

ஐக்கிய இராச்சியத்திலிருந்து ஒரு இலட்சத்து 16 ஆயிரத்து 432 சுற்றுலா பயணிகளும் ரஷ்யாவிலிருந்து ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 493 சுற்றுலா பயணிகளும் ஜேர்மனியிலிருந்து 78 ஆயிரத்து 462, சீனாவிலிருந்து 71 ஆயிரம், பிரான்ஸிலிருந்து 65 ஆயிரத்து 560 , அவுஸ்திரேலியாவிலிருந்து 56 ஆயிரத்து 137 சுற்றுலாவிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். (ஐ)

# துமிந்தவுக்கு பிணை

கொழும்பு, ஜூலை 16

தங்க முலாம் பூசப்பட்ட ரி-56 ரக துப்பாக்கி தொடர்பில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் துமிந்த திஸநாயக்கா பிணையில் செல்ல கொழும்பு மேல் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

துமிந்த திஸநாயக்க சமர்ப்பித்த பிணை மனுவை பரிசீலித்த பின்னர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன, அவரை பிணையில் செல்ல அனுமதித்தார்.

சந்தேகநபரை 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பிணை, 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான 2 சரீரப்பிணைகளில் விடுவிக்க நீதிபதி உத்தரவிட்டார்.

வெளிநாட்டு பயணத் தடை விதித்த நீதிபதி சந்தேகநபரின் கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ)

# 3,525 தாதியரை சேவையில் இணைப்பதற்கு நடவடிக்கை!

## சுகாதார அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 16


தாதியர் சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2020 முதல் 2022 வரையிலான க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தி பெற்ற 2 ஆயிரத்து 650 மாணவர்களையும் தாதியர் பட்டம் பெற்ற 850 பட்டதாரிகளையும் ஆட்சேர்ப்பு செய்ய இரண்டு வர்த்தமானி அறிவித்தல்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வெளியிடப்படும் என சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்றையதினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், ”உண்மையில், எங்களுக்கு தாதியர் பற்றாக்குறை உள்ளது. வடக்கில் மட்டும் 33 பிராந்திய மருத்துவமனைகளில் தாதியர்கள் சேவையில் இல்லை. 2020, 2021 மற்றும் 2022 க. பொ. த. உயர்தர பரீட்சைகளுக்குத் தோற்றிய 2,650 பேரை தாதியர்களாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான வர்த்தமானி அறிவிப்பை இந்த வெள்ளிக்கிழமை நாங்கள் அங்கீகரித்து வெளியிடுகிறோம். எனவே, இந்தப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க அவர்களுக்கு வாய்ப்பு உள்ளது.

கூடுதலாக, கடந்த காலத்தில் செவிலியர் பட்டம் பெற்ற 875 பட்டதாரிகளை பொது சேவையில் இணைத்துக் கொள்ள உள்ளோம். அதற்கான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வெளியிடப்படும். பயிற்சி பெறுபவர்களில் ஒரு பகுதியினருக்கும், உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களில் ஒரு பகுதியினருக்கும் பயிற்சி வழங்கப்படவுள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை - 16 புதன்கிழமை
விசுவாவசு வருடம் - ஆனி 32
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சஷ்டி

## இன்றைய ராசிபலன்

**மேடம்** உங்களுடைய ஆலோசனைகள் எல்லோரும் ஏற்கும் படி இருக்கும். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**இடபம்** சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**மிதுனம்** உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். தலைமையின் ஆதரவு கிட்டும்.

**கடகம்** சந்திராஷ்டமம் இருப்பதால் தன்னம்பிக்கை குறையும்.சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். அதிகாரிகள் குறைக் கூறுவார்கள்.

**சிம்மம்** பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனைவி வழி உறவினர்கள் மதிப்பார்கள். புது நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும்.

**கன்னி** எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**துலாம்** குடும்பத்தோடு உங்களின் நேரத்தை செலவழிப்பீர்கள். அக்கம்-பக்கம் இருப்பவர்களின் அன்புத் தொல்லை குறையும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.

**விருட்சிகம்** தடைகளை கண்டு தளர மாட்டீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். புது வேலை கிடைக்கும். உத்தியோகத்தில் உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**தனுசு** குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**மகரம்** கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கும்பம்** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும்.

**மீனம்** கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்காதீர்கள். மேலதிகாரியுடன் விவாதம் வேண்டாம்.

# யாழ்ப்பாணத்தில் வீட்டின்மீது பெற்றோல் குண்டு தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை பகுதியில் உள்ள வீடொன்றின் மீது அடையாளம் தெரியாத நபர்களால் பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று அதிகாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் பணியாற்றும் சிறைக் காவலாளியின் வீட்டின் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதலுக்கான காரணம் தெரியவராத நிலையில் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)



# வவுனியாவில் வீதியில் விழுந்து கிடந்த குடும்பஸ்தர் மாரடைப்பால் மரணம்!

## சட்ட வைத்திய அதிகாரி தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 16

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாரடைப்பு காரணமாகவே குடும்பஸ்தர் மரணமடைந்ததாக சட்ட வைத்திய அதிகாரி ஆர். நாயக்கரத்னே தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வவுனியா, கூமாங்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் ஒருவர் வீதியில் விழுந்து மரணமடைந்தார். இதன்போது அப் பகுதியில் பயணித்த போக்குவரத்து பொலிஸாரே குறித்த மரணத்துக்கு காரணம் என தெரிவித்த ஒரு குழுவினர் குழப்பத்தில் ஈடுபட்டதுடன், பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்தினர்.

மரணம் தொடர்பில் விசாரணை செய்ய சென்ற பொலிஸார் மீது அப் பகுதியில் குழுமி இருந்தவர்கள் தாக்குதல் நடத்தியதாகவும், அதில் 5 பொலிஸார் காயமடைந்ததுடன், பொலிஸாரின் இரு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கப் ரக வாகனம் ஒன்றும் சேதமடைந்தன.

இந்த நிலையில், அப்பகுதியில் மரணித்த இராமசாமி அந்தோனிப்பிள்ளை (வயது -58) என்பவரின் உடற்கூற்று பரிசோதனை வவுனியா மருத்துவமனையில் சட்ட வைத்திய அதிகாரி ஆர்.நாயக்கரத்னே முன்னிலையில் இடம்பெற்றது.

"மரணித்தவரின் உடலில் புதிய காயங்கள் எதுவும் இல்லை. வலது காலில் பழைய வடுக்கள் காணப்படுகின்றன. இதயத்தின் முன் புறப்பகுதியில் கடுமையான இரத்த உறைவு உருவாக்கம் காணப்படுகின்றது. இதயத்தின் தசைப்பகுதி மற்றும் இரத்த மாதிரி கொழும்புக்கு இரசாயன பகுப்பாய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், மாரடைப்பு காரணமாகவே அவர் மரணமடைந்தார்"- என்று சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார். (எ-10)

# இடமாற்றங்களைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 16

வடக்கு மாகாண இடமாற்றக் கொள்கையை வினைத்திறனாக மாற்றியமைப்பதற்கும் ஆசிரிய இடமாற்றங்களை தாமதமின்றி நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் மற்றும் இலங்கை அதிபர் சேவைச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஜேர்மனியிலிருந்து வந்தவருடன் இணைந்து யாழில் இளைஞனைத் தாக்கிய கும்பல்

## இளைஞன் படுகாயம், 11 பேர் தலைமறைவு

யாழ்ப்பாணம், ஜூலை 16

ஜேர்மனியிலிருந்து விடுமுறையில் யாழ்ப்பாணத்துக்கு வந்த நபர் ஒருவர் பத்து பேருடன் சேர்ந்து இளைஞன் ஒருவரை மூர்க்கத்தனமாக தாக்கியதில், அந்த இளைஞன் படுகாயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஈச்சமோட்டை பகுதியைச் சேர்ந்த நபர் ஜேர்மனியிலிருந்து விடுமுறையை கழிப்பதற்காக யாழ்ப்பாணத்துக்கு திரும்பியுள்ளார். அவர் தனது சகோதரி குடும்பத்தினருடன், குறிப்பாக, சகோதரியின் கணவருடனும் முரண்பட்டுள்ளார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜேர்மனியிலிருந்து வந்த நபர், தனது சகோதரன் மற்றும் நண்பர்கள் என 10 பேருடன் சேர்ந்து மது அருந்தியுள்ளார்.

அவ்வேளை, ஏற்கனவே தன்னுடன் முரண்பட்ட சகோதரியின் கணவரது நண்பர் அவ்வழியே சென்றுள்ளார். அவ்வேளை, மதுபோதையில் இருந்த அந்த கும்பல், அந்த இளைஞனை வம்புக்கு இழுத்து வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளது.

பின்னர், அவர்கள் அந்த இளைஞனை மண்வெட்டியின் பிடி மற்றும் கூரிய ஆயுதங்களால் மூர்க்கத்தனமாக தாக்கியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞனை அயலவர்கள் மீட்டு, யாழ்ப்பாணம் போதனா மருத்துமனைக்கு கொண்டு வந்தனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலையில், தாக்குதல் நடத்திய 11 பேரும் தலைமறைவாகியுள்ளதாகவும், அவர்களைக் கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் ஜேர்மனியிலிருந்து வந்த நபர் மீண்டும் அந்த நாட்டுக்கு தப்பிச் செல்லாதவாறு தீவிர விசாரணைகளிலும் நடவடிக்கைகளிலும் பொலிஸார் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசு கொள்ளையரை பாதுகாக்கவில்லை!

## இதுவே மிகப்பெரிய வெற்றிதான் என்கிறார் சரத் பொன்சேகா

கொழும்பு, ஜூலை 16

**"தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கொள்ளையர்களை பாதுகாக்கவில்லை. புதிய அரசாங்கத்தின்கீழ் கிடைக்கப்பெற்ற மிகப்பெரிய வெற்றி இதுவாகும். இதனை நிச்சயம் வரவேற்கவேண்டும்."**

-இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

சில துறைகளில் இந்த அரசாங்கம் பலவீனமாக உள்ளது என்பது தெரிகின்றது. சிற்சில குறைப்பாடுகள் உள்ளன என்பது ஆட்சியாளர்களுக்கும் தெரியும்.

எது எப்படி இருந்தாலும் கள்வர்களை பாதுகாத்தல் என்ற விடயத்தில் இருந்து இந்த அரசாங்கம் நாட்டை பாதுகாத்துள்ளது. குறுக்கு வழியில் சென்று கள்வர்களால் தப்ப முடியாது.

குற்றவாளிகள் சட்டத்தின் பிடிக்குள் சிக்கினால், அவரை பாதுகாக்க அரசாங்கம் தலையிடுவதில்லை.

புதிய ஆட்சியின் கீழ் மக்களுக்கு கிடைக்கப்பெற்ற மிகப்பெரிய வெற்றி இதுவாகும். இதற்குரிய கௌரவத்தை அரசாங்கத்துக்கு வழங்க வேண்டும். கடந்த ஆட்சியாளர்களின் கீழ் இப்படி நடக்கவில்லை. கடந்த காலங்களில் கொள்ளையர்கள் பாதுகாக்கப்பட்டனர்.

நான் அரசியலமைப்பை மதிப்பவன். சட்டத்தை பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயற்படுபவன். இராணுவத்தில் இருந்தபோதும் அரசியல்வாதிகளை அல்ல, அரசமைப்பை பாதுகாக்கவே செயற்பட்டோம். -என்றார். (அ)

# மகிந்தவின் மவுசு எகிறியுள்ளது!

## ரோஹித அபேகுணவர்தன கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 16

தேசிய மக்கள் சக்தியின் செயற்பாடுகளால் மகிந்த ராஜபக்ஷவுக்கான மவுசு எகிறியுள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

களுத்துறை பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு-

அன்றும், இன்றும், என்றும் எனது அரசியல் தலைவர் மகிந்த ராஜபக்ஷதான். சிலிண்டரில் நான் வாக்குகேட்டவேளையிலும் இதனை பகிரங்கமாக குறிப்பிட்டிருந்தேன். மகிந்த போன்றதொரு அரசியல் தலைவர் மீள உருவாகப்போவதில்லை. தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகளால் மஹிந்தவுக்குரிய பெறுமதி அதிகரித்துள்ளது.

எமது ஆட்சி இருந்திருந்தால் மஹிந்தவை கிழட்டு மைனா எனவும், நாமலை குட்டி மைனா எனவும் தேசிய மக்கள் சக்தியினர் விமர்சித்திருப்பார்கள். அன்று எம்மை இப்படி விமர்சித்தவர்களுக்கு மக்கள் இன்று சமூகவலைத்தளங்களில் சிறப்பான பதிவுகளை பதிவிட்டுவருகின்றனர்.

தேசிய மக்கள் சக்தியினருக்கு ஆட்சியை வழங்கியது நல்லது.

இப்போது யதார்த்தம் புரிந்திருக்கும். தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவதற்கு எமது கட்சி ஆதரவாளர்களே காரணம் அவர்களும் உண்மையை புரிந்துகொண்டுள்ளனர். மகிந்த ராஜபக்ஷவை விரைவில் களுத்துறைக்கு அழைத்துவருவேன்-என்றார். (அ)

# தேசிய சைபர் பாதுகாப்புத் திட்டத்தை வலுப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஜூலை 16

டிஜிற்றல் பொருளாதார அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவால் முன்வைக்கப்பட்ட இலங்கையின் தேசிய சைபர் பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்த அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

உலக வங்கியின் ஆதரவுடன் இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு உருவாக்கிய இந்த திட்டம், 2018 இல் அறிமுகப்படுத்தப் பட்டு 2019 மற்றும் 2023 இற்கு இடையில் செயல்படுத் தப்பட்ட நாட்டின் முதல் சைபர் பாதுகாப்பை அடிப் படையாகக் கொண்டது.

சட்டம் மற்றும் ஒழுங்கு முறை கட்டமைப்பை மேம்படுத்துதல், சைபர் பாதுகாப்பு விழிப்புணர்வை மேம்படுத்துதல், தயார்நிலையை மேம்படுத்துதல், பதிலளிக்கும் திறன்களை வலுப்படுத்துதல் மற்றும் அதிக ஒத்துழைப்பை வளர்ப்பது உள்ளிட்ட முக்கிய கருப்பொருளை இத்திட்டம் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. (அ)

# சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற முறைகேடுகள் குறித்து ஆராய குழு நியமனம்

கொழும்பு, ஜூலை 16

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற முறைகேடுகளைப் பற்றி ஆராய்வதற்கு புதிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற, நிர்வாக மற்றும் நிதி முறைகேடுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காகவே சுயாதீன விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் தொடர்பில் அரசாங்கப் பொறுப்புக் கணக்குகள் குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்காக நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட இக்குழு உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவவினால் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவின் தலைவராக முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி விஜித் கே. மலலகொட, று/ஹணு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் காமினி சேனாநாயக்க, அரச உடைமைகள் மற்றும் வியாபார அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் டபிள்யு.எம்.சி. பண்டார ஆகியோர் குழு அங்கத்தவர்களாகவும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உதவி கணக்காய்வாளர் ஹஸ்தி பத்திரண அழைப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட சம்பவம் பற்றிய விசாரணை அறிக்கையினை 60 நாட்களுக்குள் கல்வி, உயர் கல்வி, தொழிற்கல்வி அமைச்சிடம் கையளிக்க வேண்டும். (அ)

# நிவாரணம் வழங்குவதாகக் கூறிய அரசு நாளுக்கு நாள் வரிகளை அதிகரிக்கிறது

## காவிந்த ஜயவர்த்ன சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 16

அமெரிக்காவின் வரி அதிகரிப்பு தொடர்பிலே அனைவரும் கதைக்கின்றனர், ஆனால் அரசாங்கம் மக்களுக்கு அதிகரித்துவரும் வரிகள் தொடர்பில் யாரும் கதைப்பதில்லை. வரிகளை குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாக தெரிவித்து ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தற்போது நாளுக்கு நாள் வரி அதிகரித்து வருகிறது என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்ன தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அமெரிக்க ஜனாதிபதியினால் விதிக்கப்பட்டிருந்த நூற்றுக்கு 44 வீத தீர்வை வரி தற்போது 30 வீதமாக குறைக்கப்பட்டுள்ளது. நாடு என்ற ரீதியில் எந்தளவு வரி குறைக்கப்பட்டாலும் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அதனால் நாட்டுக்கே நன்மை கிடைக்கும். அதேபோன்று தற்போது விதித்திருக்கும் 30 வீத வரியுடன் ஏற்கனவே இருந்த நூற்றுக்கு 16வீத வட் வரியும் சேர்க்கப்படும் என ஜனாதிபதியின் பொருளாதாரம் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் துமிந்த /ஹலங்கமுவ தெரிவிக்கிறார். ஆனால் இதுதொடர்பில் அரசாங்கம் எதனையும் தெரிவிப்பதில்லை.

அவ்வாறு இடம்பெறுமாக இருந்தால், அது எமது நாட்டின் தொழிற்சாலைகளுக்கே பாரிய பாதிப்பாக அமையும். குறிப்பாக ஆடை தொழிற்சாலைகள் வீழ்ச்சியடைந்தால், பாரியளவில் தொழில் இல்லாத பிரச்சினை ஏற்படும். அதனால் அரசாங்கம் இதுதொடர்பில் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும். இந்த விடயத்தில் எதிர்க்கட்சி என்றவகையில் நாங்கள் அரசியல் லாபம் தேட முயற்படுவதில்லை. எங்களால் முடிந்த ஒத்துழைப்பை வழங்க தயாராக இருக்கிறோம். ஆனால் அரசாங்கம் தலைக்கனம் பிடித்தது போன்றே செயற்பட்டு வருகிறது.

அதேநேரம் அமெரிக்கா வரி அதிகரிப்பது தொடர்பில் அனைவரும் கதைக்கின்றனர். ஆனால் அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 10 மாதங்களில் மக்களுக்கு அதிகரித்துள்ள வரி தொடர்பில் யாரும் கதைப்பதில்லை. மக்களுக்கு சுமையாக இருக்கும் வரிகளை குறைத்து நிவாரணம் வழங்குவதாக தெரிவித்தே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால் ஆட்சிக்கு வந்ததில் இருந்து வரிகள் மற்றும் பொருட்களின் விலை அதிகரித்து வருகிறது.

குறிப்பாக இளைஞர்களின் பொருளாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் புதிதாக டிஜிற்றல் பொருளாதாரத்துக்கு நூற்றுக்கு 18 வீத வரி வித்திருக்கிறது. அதேபோன்று எரிபொருள் விலை அதிகரிப்பு, மின்சாரக் கட்டண அதிகரிப்பு, பால்மா விலை அதிகரிப்பு, சுகாதாரத்துறை கட்டண அதிகரிப்பு என அனைத்து துறைகளிலும் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசாங்கம் இதுவரை காலத்துக்கும் பஸ் கட்டணத்தை பூச்சியம் தசம் 55 வீதத்தால் குறைத்துள்ளது-என்றார். (அ)

# பெண் கான்ஸ்டபிளை ஆபாசமாக திட்டிய பொலிஸ் பரிசோதகர் கைது!

கொழும்பு, ஜூலை 16

பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை ஆபாச வார்த்தைகளால் திட்டினார் எனக் கூறப்படும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் தங்காலை பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை, தங்காலை பொலிஸ் ஊழல் தடுப்பு பிரிவில் கடமையாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரே கைது செய்யப்பட்டார்.

தங்காலை பொலிஸ் தலைமையகத்தில் கடமையாற்றும் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கடந்த 12 ஆம் திகதி தங்காலை பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தில் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபரான உப பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# மிகிந்தலையில் துப்பாக்கி, வாள்கள் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 16

அநுராதபுரத்தில் மிகிந்தலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அம்பதலாகம பிரதேசத்தில் துப்பாக்கி, வாள் மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் மிஹிந்தலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மிகிந்தலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் மிஹிந்தலை பிரதேசத்தி வசிக்கும் 43 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, வாள் மற்றும் 60 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மிஹிந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேயிலை, தேங்காய் ஏற்றுமதி வருவாய் இவ்வருடம் உயர்வு

கொழும்பு, ஜூலை 16

இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் தேயிலை மற்றும் தேங்காய் ஏற்றுமதி வருவாய் கணிசமாக அதிகரித்துள்ளது.

அதன்படி, கடந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 565.3 மில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்த தேயிலை ஏற்றுமதி வருவாய், இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 7.9 சதவீதம் அதிகரித்து 610.1 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் இது கூறப்பட்டுள்ளது.

மேலும், தேங்காய் ஏற்றுமதி வருவாய் கடந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 158.2 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த நிலையில், இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 25.3 சதவீதம் அதிகரித்து 198.1 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

இந்த ஐந்து மாதங்களில் கருப்பு தானிய ஏற்றுமதி வருவாய் 55.8 சதவீதம் அதிகரித்து 171.1 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளதாகவும் அறிக்கை கூறுகிறது. (அ)

# பிரதம கணக்காய்வாளர் பதவியை நண்பருக்காக காலி செய்தார் அநுர!

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு




கொழும்பு, ஜூலை 16

**பல்கலைக்கழக நண்பனை தலைமை கணக்காய்வாளராக நியமிப்பதற்காகவே பிரதம கணக்காய்வாளர் பதவியை ஜனாதிபதி வறிதாக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பு பேரவையின் 3 சிவில் பிரஜைகளின் எதிர்ப்பினால் ஜனாதிபதியின் நோக்கம் தோல்வியடைந்துள்ளது. இம்மூவரின் பதவி காலம் எதிர்வரும் ஜனவரி மாதம் நிறைவடைந்தவுடன் ஜனாதிபதி தனது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வார் என்று பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**

கொழும்பில் உள்ள பிவிதுறு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏப்ரல் மாதத்தில் இருந்து பிரதம கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகியுள்ளது. இந்த பதவிக்கு கல்வி தகைமை மற்றும் தொழில் தகைமை உள்ள தர்மபால கம்மன்பில என்பவரை நியமிக்குமாறு கணக்காய்வாளர் சங்கம் ஜனாதிபதிக்கு வலியுறுத்தியுள்ள நிலையில், திணைக்களத்தின் இதர அதிகாரிகள் இந்த கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பிரதம கணக்காய்வாளர் பதவிக்கு கணக்காய்வாளர் திணைக்களத்தில் பதவி நிலை அடிப்படையில் தர்மபால கம்மன்பில என்பவர் உள்ள நிலையில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது களனி பல்கலைக்கழகத்தில் நண்பரை இந்த பதவிக்கு நியமிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

அரசியலமைப்பு பேரவைக்கு தனது நண்பரின் பெயரை சிபாரிசு செய்துள்ளார்.

ஜனாதிபதியின் சிபாரியை அரசியலமைப்பின் மூன்று சிவில் பிரஜைகள் எதிர்த்துள்ளனர். இதனைத் தொடர்ந்து ஜனாதிபதியின் பெயர் முன்மொழிவு நிராகரிக்கப்பட்டது.

மழைக்குக்கூட கணக்காய்வாளர் திணைக்களத்தின் பக்கம் ஒதுங்காத ஒருவரை பல்கலைக்கழக நண்பர் என்ற காரணத்துக்காக பிரதம கணக்காய்வு அதிபதியாக நியமிக்கும் முயற்சியை அரசியலமைப்பு பேரவையின் 3 சிவில் பிரஜைகள் தோற்கடித்துள்ளார்கள்.

இந்த மூவரின் பதவி காலம் 2026.01.03 ஆம் திகதியுடன் நிறைவடையும் இதன் பின்னர் தனது நோக் கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே பதில் பிரதம கணக்காய்வாளர் நியமிக்கப் பட்டுள்ளார்.

ஜனாதிபதி செயற்பாடு முறையற்றது. தமது அரசாங்கம் ஊழல் மோசடியற்ற வகையில் செயற்படும் என்று குறிப்பிடும் ஜனாதிபதி ஏன் விடயதானத்துடன் தொடர்பில்லாத ஒருவரை பிரதம கணக்காய்வாளராக நியமிக்க முயற்சிக்க வேண்டும். கணக்காய்வு திணைக்களம் சுயாதீனமான முறையில் செயற்பட்டால் தான் ஊழலை இல்லாதொழிக்க முடியும். அரசாங்கத்தின் முறையற்ற போக்கினை நாட்டு மக்கள் அவதானிக்க வேண்டும்-என்றார்.

(அ)

# இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு பொலிஸ் கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு, ஜூலை 16

இலஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சீதுவை-ரத்தொலுகம பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் ரத்தொலுகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் ஆவார்.

சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள், போக்குவரத்து விதி மீறல் குற்றத்துக்காக முறைப்பாட்டாளரின் வாகன அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொண்டு, சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காக முறைப்பாட்டாளரிடம் 3 ஆயிரம் ரூபா பணத்தை இலஞ்சமாக பெற்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைதசெய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# இலங்கை-இந்திய ஊடக நட்புறவுச் சங்க உத்தியோகபூர்வ இணையத்தளம் திறப்பு

கொழும்பு, ஜூலை 16

இலங்கை - இந்திய ஊடக நட்புறவு சங்கத்தின் ாவவிள:ஃஃஃ ளடஅைகய.டமஃ எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை நேற்று முன் தினம் திங்கட்கிழமை இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா ஆரம்பித்து வைத்தார்.

இலங்கை - இந்திய ஊடக நட்புறவு சங்கத்தின் பொதுக்கூட்டம் கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தில் நடைபெற்றது.

இந்த பொதுக்கூட்டத்தில் புதிய உறுப்பினர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டதோடு, இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கிடையேயான ஊடக ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் பற்றி கலந்துரையாடப்பட்டன.

2024 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி இலங்கை - இந்திய ஊடக நட்புறவு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

(அ)

# டுபாயிலிருந்து வந்த இளைஞன் விமான நிலையத்தில் கைது

கொழும்பு, ஜூலை 16

சுமார் 7 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் சந்தேகநபர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாயிலிருந்து வந்த குறித்த சந்தேகநபரிடம், மின்னணு சிகரெட்டுகளை சார்ஜ் செய்யப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்களும் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர் விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்றபோது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் கைதான 26 வயதான சந்தேகநபர் மாவதகமவில் வசிப்பவர், டுபாயில் உள்ள ஒரு உணவகத்தில் பல ஆண்டுகளாக பணியாற்றி வந்தார்.

(அ)

# சிகிச்சை பலனின்றி பாத்தியா உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 16

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த பாத்தியா என்ற யானை நேற்று காலை உயிரிழந்தது.

நேற்றுக் காலை 8.55 மணியளவில் குறித்த யானை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நிக்கவெரட்டிய மற்றும் அம்பன்பொல எல்லையை ஒட்டியுள்ள காடுகளில் வாழும் யானையாக நம்பப்படும் 'பாத்தியா' என்று அழைக்கப்படும் யானை, கடுமையான நோய் காரணமாக பல நாட்களாக சிகிச்சை பெற்று வந்தது.

இடது காலில் காயத்தால் அவதிப்பட்ட யானை, பொல்பிதிகம நீர்த்தேக்கக் காப்பகத்தில் சேற்று நீரில் கிடந்த நிலையில் சிகிச்சைக்குப் பிறகு குணமடைந்து வந்தது.

இருப்பினும், யானைக்கு சிகிச்சை அளித்து அதன் உயிரைக் காப்பாற்ற நிறைய முயற்சிகள் தேவைப்பட்டன. பாத்தியா என்ற யானை, பொல்பிதிகம பகுதியில் உள்ள ஒரு நீர்நிலையில் சுமார் ஒரு வாரம் கிடந்தது.

பெப்ரவரியில், நிகவெரட்டிய வனவிலங்கு சரணாலயத்தில் சுடப்பட்ட பின்னர் காயமடைந்த இந்த யானையை கிராம மக்கள் கவனித்தனர்.

அதைத் தொடர்ந்து, மே மாதத்தில், மற்றொரு துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளான பாத்தியா, சுமார் 20 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள மஹாவா வனவிலங்கு சரணாலயத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

(அ)

# சவுதி அரேபியாவுடன் இரு தரப்பு கடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்ட இலங்கை!

கொழும்பு, ஜூலை 16

சவுதி மேம்பாட்டு நிதியத்துடன் இலங்கை அரசாங்கம் இருதரப்பு கடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.

இது நாட்டின் தற்போதைய வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயல்பாட்டில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது என்று நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையின் சவாலான பொருளாதார சூழ்நிலைகள் காரணமாக கடன் நிறுத்தப்பட்டதாக அறிவித்த பின்னரும், சவுதி அரேபியா இராச்சியம் தொடர்ந்து கடன் வழங்குவதன் மூலம் இலங்கைக்கு ஆதரவளிப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளது.

இந்த [illegible] நிதி உதவி, நாடு முழுவதும் உள்ள வளர்ச்சித் திட்டங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், சவுதி மேம்பாட்டு நிதியத்தால் வழங்கப்பட்ட கடன்கள் சலுகை அடிப்படையில் வழங்கப்பட்டன.

இது இலங்கையின் ஒட்டு மொத்த கடன் சுமைக்கு மிகவும் தேவையான நிவாரணத்தை வழங்குகிறது.

இருதரப்பு திருத்த கடன் ஒப்பந்தங்கள் 2025 ஜூலை 14 அன்று கையெழுத்தானதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மொத்த மறுசீரமைக்கப்பட்ட தொகை 516,951,065.02 சவுதி ரியால் ஆகும்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, இலங்கை அரசாங்கத்தின் சார்பாக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார்.

சவுதி அரேபியாவின் சார்பாக சவுதி மேம்பாட்டு நிதியத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சுல்தான் அப்துல்ரஹ்மான் ஏ. அல்மர்ஷாத் கையெழுத்திட்டார்.

இந்த கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களின் வெற்றிகரமான முடிவு, சவுதி அரேபியா இராச்சியத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான ஆழமான மற்றும் நீண்டகால இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று நிதி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்து ஆளுவது மகிந்த குடும்பமே!

## கூறுகிறார் சாகர காரியவசம்

கொழும்பு, ஜூலை 16

**அடுத்து ஆட்சியைப் பிடிக்கப்போவது மகிந்தவின் குடும்பம் தான். அதனாலேயே இந்த அரசு மகிந்தவின் குடும்பத்தைக் கண்டு அஞ்சுகிறது என்று மொட்டுக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-பாராளுமன்றத் தேர்தலில் 2.5 வீதமாக இருந்த எமது வாக்குவங்கியை 10 வீதமாக உயர்த்தியுள்ளோம். மக்களின் நம்பிக்கையை வென்ற கட்சியாக நாமே உள்ளோம். மகிந்தவின் குடும்பம் இப்போது மக்களின் நம்பிக்கையை வென்று வருகிறது. நாங்கள் குற்றச்சாட்டுகளைக் கண்டு அஞ்சவில்லை. எல்லாவற்றையும் எதிர்கொள்ள நாம் தயார். எல்லாமே உருப்படியற்ற குற்றச்சாட்டுகள். கடந்த காலங்களில் சாட்சிகள் இல்லாமல் ஒதுக்கப்பட்ட மகிந்த குடும்பத்துக்கு எதிரான வழக்குகளை மீண்டும் விசாரணைக்கு எடுத்துள்ளார்கள். நீதிபதிகளுக்கு அழுத்தம் கொடுத்து எம்மை சிறையில் தள்ள வேண்டாம். நாம் நிச்சயம் ஆட்சியைப் பிடிப்போம் கடந்த காலங்களில் எங்களது ஆட்சியில் நாங்கள் செய்த பிழையை இனி செய்யமாட்டோம்-என்றார். (அ)

# இலங்கை தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தை தனியார் நிறுவனமாக மாற்றுவது சட்டவிரோதமானது

## அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு

கொழும்பு, ஜூலை 16

மகாபொல நிதியத்துக்குச் சொந்தமான இலங்கை தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தை முழுமையான தனியார் நிறுவனமாக மாற்றுவது சட்டவிரோதமானது என்றும், அதனை மகாபொல நிதியத்தினால் நிர்வகிக்கும் நிறுவனமாக மாற்றுவதற்குத் தேவையான சட்டரீதியான நடவடிக்கையை எடுக்குமாறு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) அறிவுறுத்தியது.

இதற்குத் தேவையான எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த சமரவீர, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கே.ஈ.விமலேந்திர ராஜா மற்றும் மகாபொல நம்பிக்கை நிதியத்தின் தலைவர் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் விஜித மலல்கொட ஆகியோருக்கு அறிவுறுத்தினார்.

லலித் அத்துலத்முதலி மகாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை குறித்து கடந்த வாரம் கோப் குழுவில் ஆராயப்பட்டபோதே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

2015ஆம் ஆண்டு அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய ஏற்படுத்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் அப்போதிருந்த அமைச்சரின் ஒப்புதலுடன் குறித்த சொத்து கையகப்படுத்தப்பட்டமை சட்டவிரோதமானது என்பது குறித்து இங்கு நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது.

இதற்காக 408 மில்லியன் ரூபா இலங்கை தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் மகாபொல நிதியத்துக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும், நிதியத்திற்குச் சொந்தமான நிறுவனத்தினால் நிதியத்துக்கு இவ்வாறு நிதியை வழங்கி உரிமையைப் பெற்றுக்கொள்வது பிரச்சினைக்குரியது என்றும் கோப் குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இதற்கமைய இதில் தவறிழைத்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும், எதிர்காலத்தில் இது போன்ற சட்டவிரோத அல்லது மோசடியான செயற்பாடுகள் இடம்பெறாது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் கோப் குழுவின் தலைவல் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பதவி ரீதியாக நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க, இதுபோன்ற மோசடிகள் மூடிமறைக்கப்படுவதற்கு இடங்கொடுக்கப் போவதில்லையென்றும், எதிர்காலத்தில் விசாரணைகள் நடத்தப்படும் என்றும் கூறினார்.

நேர்மையான நோக்கத்திற்காக அரசாங்க நிறுவனமாக ஆரம்பக்கப்பட்ட இந்நிறுவனம் பணிப்பாளர் சபையில் பதவி அடிப்படையில் நியமிக்கப்படும் அரசாங்க அதிகாரிகள் பணியாற்றியதாகவும், காலப்போக்கில் பாரிய அளவில் இலாபப்பட்டும் இடமாக இனங்காணப்பட்டதால் ஏற்பட்ட பேராசை காரணமாக இவ்வாறு சட்டரீதியற்ற வகையில் அரசாங்கத்திடமிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அப்போது இந்நிறுவனத்தை மாற்றுவதற்கு எதிர்த்த அதிகாரியொருவர் குழுவில் தெரிவித்தார்.

இந்த விசாரணைகள் மூலம் அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் படிக்கும் ஒரு பல்கலைக்கழகம் வீழ்ச்சியடையக்கூடும் என்ற தவறான எண்ணத்தை உருவாக்க சிலர் முயற்சிக்கலாம் என்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. எனினும், எஸ்.எல்.ஐ.ஐ.டி. நிறுவனத்தை அப்படியே பராமரிக்க வேண்டும் என்றும், அதன் பொறுப்பை மகாபொல நிதியத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், இதன் மூலம், அதிகமான மாணவர்கள் மானிய விலையில் பட்டப்படிப்புகளைத் தொடர வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. (அ)

# வைத்தியர் மகேஷிக்கு பிணை!

கொழும்பு, ஜூலை 16

நோயாளிகளுக்கு அறுவைச் சிகிச்சை உபகரணங்களை அதிக விலைக்கு விற்பனை செய்ததன் மூலம் ஊழல் செய்ததான சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஜெயவர்தனபுர வைத்தியசாலையின் சிறப்பு வைத்தியர் மகேஷி விஜேரத்னவை பிணையில் விடுவிக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகள் முன்வைத்த வாதங்களை பரிசீலித்த பின்னர் கொழும்பு தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி ஜயதுங்க இந்த உத்தரவை பிறப்பித்தார்.

அதன்படி, சந்தேக நபரை 50,000 ரூபாய் ரொக்கப் பிணையிலும், தலா 5 மில்லியன் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுவிக்க உத்தரவிடப்பட்டது.

சந்தேக நபருக்கு ஜெயவர்தனபுர வைத்தியசாலைக்குள் நுழையவும் தடை விதிக்கப்பட்டதுடன், வெளிநாட்டுப் பயணங்களைத் தடை செய்யவும் தலைமை நீதவான் உத்தரவிட்டார்.

வைத்தியர் மகேஷி விஜேரத்ன, தான் இணைந்த தனியார் நிறுவனம் மூலம் நோயாளிகளுக்கு ரூ.50,000 பெறுதியான மருத்துவ உபகரணங்களை ரூ.175,000க்கு விற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நோயாளிகளுக்கு ரூ.300 மில்லியனுக்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டதாகக் குற்றம் சாட்டிய இலஞ்ச ஒழிப்பு ஆணையகம், வைத்தியர் அதிகாரபூர்வ வைத்தியசாலை நடைமுறைகள் மூலம் அறுவை சிகிச்சை பொருட்களை வாங்காமல் பொது சேவை கொள்முதல் விதிகளை மீறியதாகக் கூறியது.

அதற்கு பதிலாக அந்தப் பொருட்கள் அவரது தனியார் நிறுவனம் மூலம் சுமார் 300 நோயாளிகளுக்கு விற்பனை செய்ததாகவும் தெரியவந்துள்ளது.

பல நாட்களாக மூளைச்சாவு அடைந்ததாக அறிவிக்கப்பட்ட நோயாளிகளுக்கு அவர் அறுவை சிகிச்சை செய்திருப்பதும் அண்மையில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தின் பின்னணியில் மருத்துவ மோசடிக்கு உதவிய அவரது இரண்டு சகாக்களும் கைது செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நிஷாந்த விக்ரமசிங்க பிணையில் விடுதலை!

கொழும்பு, ஜூலை 16

சிறிலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நிஷாந்த விக்ரமசிங்கவை பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி நேற்று செவ்வாய்க் கிழமை காலை உத்தரவிட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிஷாந்த விக்ரமசிங்க கொழும்பு நீதவான் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நிஷாந்த விக்ரம சிங்கவை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணை மற்றும் 5 மில்லியன் ரூபா பெறு மதியான மூன்று சரீர பிணை களில் விடுதலை செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

நிஷாந்த விக்ரமசிங்க, விமானங்கள் கொள்வனவு செய்தமை தொடர்பான விசார ணைகளுக்கு அமைய இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வீசா விதிமுறைகளை மீறிய 10 வெளிநாட்டவர்கள் கைது!

கொழும்பு, ஜூலை 16

சுற்றுலா விசாவில் நாட்டுக்குள் நுழைந்து தொழில் ஈடுபட்டதற்காக மொத்தம் 10 வெளிநாட்டினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு-03 பகுதியில் அமைந்துள்ள ஒரு மசாஜ் நிலையத்தில் குடிவரவு மற்றும் குடியல்வுத் திணைக்கள அதிகாரிகள் நேற்று முன் தினம் மாலை நடத்திய சிறப்பு சோத னையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் சுற்றுலா விஸாக்களில் நாட்டுக்குள் நுழைந்திருந்தனர்.

அவர்களில் நான்கு பேர் கைது செய்யப்பட்ட நேரத்தில் தங்கள் விஸா காலத்தை மீறி நாட்டில் தங்கியிருந்தது தெரியவந்தது.

25 முதல் 39 வயதுக்குட் பட்ட பெண்களில் ஆறு தாய்லாந்து நாட்டினர், மூன்று வியட்நாமிய நாட்டினர் மற்றும் ஒரு சீன நாட்டவர் அடங்குவர்.

கைது செய்யப்பட்ட குழுவினர் தற்போது மிரிஹான தடுப்பு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், அவர்களை உடனடியாக அந்தந்த நாடுகளுக்கு நாடு கடத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. (அ)

# போலி நாணயத்தாள்களுடன் 52 வயது பெண் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை 16

மொறட்டுவை நகரில் போலி நாணயத்தாள்களுடன் 52 வயது பெண் ஒருவரை மொறட்டுவை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன் தினம் மாலை நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில், மொறட்டுவை, ராவதாவத்தையைச் சேர்ந்த சந்தேக நபரிடமிருந்து 10 போலி 5,000 ரூபாய் நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டன.

விசாரணையில், சந்தேக நபரின் வீட்டிலிருந்து போலி நாணயத்தாள்களை அச்சிடப் பயன்படுத்தப்பட்ட அச்சு இயந்திரம், 25 போலி 5,000 ரூபாய் நாணயத்தாள்கள், 08 போலி 1,000 ரூபாய் நாணயத் தாள்கள், ஒரு போலி 100 ரூபாய் நாணயத்தாள் மற்றும் 02 போலி 20 ரூபாய் நாணயத் தாள்கள் மீட்கப்பட்டன.

மொறட்டுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மகியங்கனையில் விபத்து இருவர் பலி!

கொழும்பு, ஜூலை 16

மகியங்கனை-பதுளை பிரதான வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை பயணித்த கார் ஒன்று மஹியங்கனை 17ஆவது மைல்கல்லுக்கு அருகில் வியன கால்வாயினுள் கவிழ்ந்ததில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து சம்பவம் நேற்று முன் தினம் காலை 06:50 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

மகியங்கனை பொலிஸ் பயிற்சி பாடசாலையின் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து கால்வாயில் கவிழ்ந்த காரை மீட்டுள்ளனர். மீட்கப்பட்ட வாகனத்தின் உள்ளே இருவர் இருந்துள்ள னர்.

அவர்கள் உடனடியாக அம்புலன்ஸ் மூலம் மகியங்கனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும், அனுமதிக்கப்பட்ட நேரத்தில் இருவரும் உயிரிழந்துவிட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரேஷ்ட மாணவர்கள் தாக்குதலில் 9 மாணவர்கள் மருத்துவமனையில்

## தென்கிழக்கு பல்கலையில் பகிடிவதை உச்சம்

**ஒலுவில், ஜூலை 16**

**ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் பீட முதலாம் வருட மாணவர்கள் மீது சிரேஷ்ட மாணவர்கள் மேற்கொண்ட தாக்குதலில் 9 மாணவர்கள் இரு வேறு மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.**

திங்கட்கிழமை இரவு அம்பாறை மாவட்டம் ஒலுவில் பகுதியில் உள்ள தென்கிழக்கு வளாகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் மீது இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இதன் போது காயமடைந்த 5 மாணவர்கள் ஒலுவில் பிரதேச மருத்துவமனையிலும் ஏனைய 4 மாணவர்கள் அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையிலும் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும் கடந்த மாதமும் முதலாமாண்டு மாணவர்களை பகிடிவதை செய்த குற்றச்சாட்டின் அடிப்படையில் ஒலுவில் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தைச் சேர்ந்த 22 மாணவர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக குறித்த பல்கலைக் கழகத்தின் நிர்வாகம் தெரிவித்திருந்தது.

இதேவேளை இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதலாமாண்டு மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கடுமையான பகிடிவதை தொடர்பான காணொலி ஒன்றும் சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தது. இதில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மூன்றாம் ஆண்டில் பயிலும் மாணவர்கள் குழுவொன்று முதலாமாண்டு மாணவர்களின் அறைகளுக்குள் நுழைந்து முழந்தாளிடச் செய்து கடுமையாக துன்புறுத்தி தாக்கும் வகையிலான அக்காணொலி அமைந்திருந்ததது. (எ-01)

# மணல் அகழ்வு தடங்கல்களை தீர்க்க அரசாங்க அதிபர் உடனடி நடவடிக்கை

பொத்துவில், ஜூலை 16

பொத்துவிலில் மணல் அகழ்வு தடங்கல்களை தீர்க்க அரசாங்க அதிபர் உடனடி நடவடிக்கை எடுத்துள்ளார்.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் அப்துல் வாஸித் திங்கட்கிழமை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரமவை சந்தித்து பொத்துவில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து கலந்துரையாடினார்.

அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் பொத்துவில் பிரதேச செயலக காணிப் பிரிவில் ஏற்பட்டுள்ள தடங்கல், அங்கு நிலவும் ஆளணி பற்றாக்குறை மற்றும் வன இலாக திணைக்களத்தால் எந்தவிதமான முன்னறிவித்தலும் இல்லாமல் எல்லைக்கற்கள் இடுவது, காணிகள் கையகப்படுத்துவது சம்மந்தமாக மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

இதேபோன்று பொத்துவிலிலுள்ள முக்கிய பிரச்னையான மக்களுக்கு அன்றாடம் பாவிக்கக் கூடிய ஆற்று மணல் அகழ்வுகளில் ஏற்பட்டிருக்கக் கூடிய தடங்கல்கள், சிக்கல்கள் சம்மந்தமாகவும் கலந்துரையாடப்பட்டன.

மணல் அகழ்வு சம்மந்தமான தடங்கல்களை தீர்ப்பதற்காக உடனடியாக செயல்பட்ட அரசாங்க அதிபர், பொத்துவில் பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர், பொத்துவில் பிரதேச செயலாளர் மற்றும் அதிகாரிகள், ஏனைய உயர் அதிகாரிகளையும் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு உரிய சிக்கல்களை நிவர்த்திக்குமாறு அறிவுறுத்தல் வழங்கினார். (எ-01)



# புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

சம்மாந்துறை, ஜூலை 16

இலங்கையில் வறுமை ஒழிப்புக்காக 1995ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 30ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிப்தொர புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் அரநெகு கடன் உதவி வழங்கும் நிகழ்வும் சம்மாந்துறை பிரதேச செயலாளர் முஹம்மது ஹனீபா தலைமையில் நேற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில், பிரதம விருந்தினராக சமுர்த்தி திணைக்கள பணிப்பாளர் நாயகம் சி.டி. களு ஆராச்சி கலந்து கொண்டு சிறப்பித்தார். (எ)

# 10 பாடசாலைகளில் நேற்று முதல் திறன் வகுப்பறை செயல்திட்டம்

மட்டக்களப்பு, ஜூலை 16

மட்டக்களப்பு, பட்டிருப்பு வலயக்கல்வி பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளில் கணித, விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட பத்து பாடசாலைகளில் ஒரே நேரத்தில் திறன் வகுப்பறை இணையவழிக் கற்றல் செயல்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பட்டிருப்பு வலயக்கல்வி பணிமனையின் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் எண்ணக்கருவில் உருவான இச் செயல் திட்டத்துக்கான பூரண நிதி அனுசரணையை அனைத்துலக மருத்துவ நல அமைப்பு ( ஐ. எம். எச். ஓ.) மற்றும் ரட்ணம் பௌண்டேசன் ஆகியன இணைந்து வழங்குகிறது. பட்டிருப்பு கல்வி வலயத்தில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படாத பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் தொலைக்காட்சி வழங்கப்பட்டு குறித்த பாடவேளையில் வலயக் கல்வி அலுவலகத்தில் இருந்து வளவாளர்கள் மூலம் ஒரே நேரத்தில் கணித, விஞ்ஞான பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இந்தச் செயல் திட்டம் பட்டிருப்பு கல்வி வலயத்தில் முதன் முதலாக செயல்படுத்தப்படுகின்றது.

இந்தச் செயல்திட்டம் உத்தியோகபூர்வமாக நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் ஐ. எம். எச். ஓ. இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி, வடக்கு மாகாண முன்னாள் மேலதிக கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன், ஐ. எம். எச். ஓ. கிழக்கு மாகாண இணைப்பாளர் வி. பிரதீப்காந் உட்பட பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், மாணவர்கள், வளவாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த திறன் வகுப்பறை செயல் திட்டத்தில் முதற்கட்டமாக ஆனைகட்டியவெளி நாமகள் வித்தியாலயம், திக்கோடை கணேச மகா வித்தியாலயம், வம்மியடியூற்று வாணி வித்தியாலயம், செல்வாபுரம் செந்நெறி வித்தியாலயம், மகிளூர் சரஸ்வதி மகா வித்தியாலயம், மகிளூர் கண்ணகிபுரம் வித்தியாலயம், காக்காச்சி வட்டை மகா வித்தியாலயம், மண்டூர் மகா வித்தியாலயம், மகிளூர் முனை சக்தி வித்தியாலயம் ஆகியன பயன்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# சுற்றுலா விடுதியின் வருமானத்தில் ஒரு வீதம் வரி அறவிடத் தீர்மானம்

மட்டக்களப்பு, ஜூலை 16

மட்டக்களப்பு, பாசிக்குடாவில் உள்ள சுற்றுலா விடுதிகளுக்கு அவர்கள் ஈட்டும் வருமானத்தில் ஒரு வீதம் வரி அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியால் உள்ளூராட்சி மன்றங்களின் விவகாரங்களை கையாளுவதற்காக நியமிக்கப்பட்ட முன்னாள் முதல்வர் சரவணபவான் தலைமையிலான குழுவினர் நேற்று மட்டக்களப்பு கோறளைப்பற்று பிரதேச சபைக்கு சென்று கள ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன் மற்றும் இ. சிறிநாத் ஆகியோரும் பிரசன்னமாயிருந்தனர்.

தமிழ் அரசு கட்சியின் ஆளுகைக்குட்பட்ட 7 உள்ளூராட்சி மன்றங்களில் மாத்திரமே இவ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

நிதி நிலைமை, வருமானம் ஈட்டும் வழிகள், எதிர்கால செயல் திட்டங்கள், நடவடிக்கைகள் தொடர்பில் சபை நிர்வாகத்துடன் கலந்துரையாடப்பட்டது.

கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபையால் கடந்த காலத்தில் வருமானங்களை ஈட்டக் கூடிய சந்தர்ப்பங்கள் இருந்த போதிலும் கடந்த காலத்தில் நிர்வகித்த ஆட்சியாளர்களின் அசமந்த போக்கு காரணமாக வருமானங்கள் ஈட்டப்படாது மந்த கதியிலேயே இருந்துள்ளதாகவும் அதனை நிவர்த்தி செய்வதற்கு சில வகையான தீர்மானங்கள் குறித்த குழுவினரால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

குறிப்பாக, பாசிக்குடாவில் உள்ள சுற்றுலா விடுதிகளுக்கு அவர்கள் ஈட்டும் வருமானத்தில் ஒரு வீதம் வரி அறவிடுவதெனவும், மீன்பிடி கூட்டுத்தாபன வியாபாரிகளிடமிருந்து இதுவரை அறவீடு எதுவும் அறவிடப்படவில்லை எனவும் அதனை பரிசீலித்து வரி அறவிடுதெனவும் பிரதேசத்தில் காணப்படும் ஐஸ் தொழிற்சாலைகளுக்கு எவ்வாறு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது என்பது தொடர்பாக ஆராய்ந்ததுடன் அவர்களிடமிருந்து வரி அறவிடுவது தொடர்பாகவும் அறவிடப்படும் பணம் இலஞ்சம் ஊழற்ற வகையில் மக்கள் சேவைகளுக்காக பயன்படுத்தப்படும் எனவும் தவிசாளர் சு. சுதாகரன் தெரிவித்தார். (எ)

# கிண்ணியாவில் கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டம் முன்னெடுப்பு



கிண்ணியா, ஜூலை 16

அரசாங்கத்தின் கிளீன் சிறீலங்கா எனும் தேசிய வேலைத் திட்டம் உள்ளூராட்சி ஆணையாளர், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோரின் ஆலோசனை, வழிகாட்டலுடன் திருகோணமலை, கிண்ணியா நகர சபையால் தவிசாளர் எம். மஹ்தி தலைமையில் நேற்றுச் செயல்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் நகர சபை உறுப்பினர்கள் செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் கடற்படையினர், சிவில் பாதுகாப்பு படையினர், பொலிஸார், ஆசிரியர்கள், மாணவர்கள், அண்ணல் நகர் சனசமூக நிலைய உறுப்பினர்கள் என பல தரப்பினர் பங்கேற்றனர்.

மூன்று கட்டங்களின் கீழ் பெரியாற்றுமுனை, தோனா சிறுவர் பூங்கா சுற்றுவட்டம், கடலூர் கோவிலடி கடற்கரையை அண்டிய பகுதிகள் என மூன்று பகுதிகளிலும் கிளீன் சிறீலங்கா பணிகள் நடைபெற்றன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் மீதான போரை ரஷ்யா 50 நாட்களில் நிறுத்த வேண்டும்!

## கடுமையான வரிகள் விதிக்கப்படும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை

வாஷிங்டன், ஜூலை 16

**50 நாட்களுக்குள் உக்ரைனுடன் போர் நிறுத்தத்துக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஒப்புக் கொள்ளாவிட்டால், ரஷ்யா மீது கடுமையான வரிகள் விதிக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இது குறித்து வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், "நாங்கள் இரண்டாம் நிலை வரிகளை அமுல்படுத்த இருக்கிறோம். 50 நாட்களில் ரஷ்யா - உக்ரைன் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படவில்லை என்றால், ரஷ்யா மீது 100 சதவீத வரிகள் விதிக்கப்படும். புடின் மீது நான் மிகவும் அதிருப்தியில் இருக்கிறேன். தான் சொல்லும் விஷயங்களை செய்யக்கூடிய நபராக நான் அவரை நினைத்திருந்தேன். அவர் மிகவும் அழகாக பேசுவார். ஆனால், இரவில் மக்கள் மீது குண்டுகளை வீசுவார். ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனுக்கு ஆதரவாக நேட்டோ படைகளுக்கு அமெரிக்கா அனுப்பும் ஆயுதங்களில் பேட்ரியாட் ஏவுகணைகள் இடம்பெறும்"- என்று ட்ரம்ப் தெரிவித்தார்.

கடந்த வாரம் செய்தியாளர்களிடம் கூறும்போதும் கூட புடின் மீதான அதிருப்தியை ட்ரம்ப் வெளிப்படுத்தியிருந்தார். "புடின் நிறைய மக்களை கொல்வதால் நான் அவர் மீது அதிருப்தியில் இருக்கிறேன்" என்று அவர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# அரசியலில் அப்பா - மகன் உறவு மிகவும் முக்கியம்

## உதயநிதி ஸ்ராலின் கருத்து


சென்னை, ஜூலை 16

அரசியலில் அப்பா - மகன் உறவு மிக முக்கியம். அப்பா பேச்சை கேட்காத மகன் என்கிற பெயரை வாங்கி விடக்கூடாது என்று தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்ராலின் தெரிவித்தார்.

திருச்சி திருவெறும்பூரில் திருமண விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த திருமணத்தில் மணமகளுக்கு இரண்டு முடிச்சுதான் போட வேண்டும் என தாய் கூறியதைக் கேட்காமல் மணமகன் மூன்று முடிச்சு போட்டுள்ளார். காரணம் ஏற்கனவே மூன்று முடிச்சும் நீங்கள்தான் போட வேண்டும் என மணப்பெண் கூறியிருக்கிறார். மணமகன் தற்போதே மனைவியின் பேச்சை கேட்க ஆரம்பித்துவிட்டார். மனைவியின் பேச்சை கேட்பது தவறு கிடையாது. அதே நேரம் மனைவி பேச்சை மட்டும் கேட்காமல் அம்மா, அப்பாவின் பேச்சையும் கேட்க வேண்டும். அரசியலில் அப்பா - மகன் உறவு மிக முக்கியம். அப்பா பேச்சை கேட்காத மகன் என்கிற பெயரை வாங்கிவிடக் கூடாது. அந்த பிரச்சினை எனக்கும் இருக்கிறது.

இந்த அரசு மகளிருக்கான அரசாக செயல்படுகிறது. மகளிர் உரிமைத் தொகை கிடைக்காமல் விடுபட்ட தகுதியானவர்கள் 'உங்களுடன் ஸ்ராலின்' முகாமில் விண்ணப்பித்து பயனடையலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (எ)



தியாகிகள் நினைவிடத்தில்

# சுவர் ஏறி குதித்து அஞ்சலி செலுத்திய முதலமைச்சர்

சிறீநகர், ஜூலை 16

தியாகிகள் நினைவிடத்தில் சுவர் ஏறி குதித்து முதலமைச்சர் உமர் அப்துல்லா அஞ்சலி செலுத்தினார்.

காஷ்மீரில் கடந்த 1931, ஜூலை 13இல் மகாராஜா ஹரி சிங்கின் ஆட்சிக்கு எதிராக போராட்டம் நடைபெற்றது. அப்போது டோக்ரா இராணுவம் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 22 பேர் உயிரிழந்தனர். இந்த நாள் ஒவ்வொரு ஆண்டும் தியாகிகள் தினமாக ஜம்மு காஷ்மீரில் அனுசரிக்கப்பட்டு வந்தது.

அன்று அரசு விடுமுறை நாளாகவும் இருந்தது. ஆனால் கடந்த 2019இல் ஜம்மு காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து இரத்து செய்யப்பட்ட பிறகு பொது விடுமுறை நாள் பட்டியலிலிருந்து இது நீக்கப்பட்டது. மேலும் தியாகிகள் கல்லறையில் நிகழ்ச்சிகள் நடத்தத் தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் சிறீநகரில் உள்ள தியாகிகள் கல்லறையில் அஞ்சலி செலுத்த வந்த முதலமைச்சர் உமர் அப்துல்லாவை பொலிஸார் தடுத்தனர். இதையடுத்து உமர் அப்துல்லா சுவர் ஏறிக் குதித்து சென்று கல்லறையில் அஞ்சலி செலுத்தினார்.

இது குறித்து உமர் அப்துல்லா கூறுகையில், "காஷ்மீரில் ஜூலை 13ஆம் திகதி தியாகிகள் தினமாக கடைப்பிடிக்கப்படும் நிலையில் நான் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டேன். கல்லறையில் அஞ்சலி செலுத்த முயன்றபோது மீண்டும் தடுக்கப்பட்டேன். எந்தச் சட்டத்தின் கீழ் நான் தடுக்கப்பட்டேன் என்பதை அறிய விரும்புகிறேன்" என்று அவர் கேள்வி எழுப்பினர். (எ)

# ஏவுகணை தாக்குதலில் 20 குழந்தைகள் மரணம்

## தொழில்நுட்ப தவறு என இஸ்ரேல் விளக்கம்

காஸா, ஜூலை 16

காஸாவில் ஏவுகணைத் தாக்குதலில் 20 குழந்தைகள் பலியான நிலையில் தொழில்நுட்ப தவறு என்று இஸ்ரேல் இராணுவம் விளக்கமளித்துள்ளது.

காஸா பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கும் பொறுப்பை, காஸா மனிதாபிமான அறக்கட்டளையிடம் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா வழங்கியுள்ளன. இங்கு நாளொன்றுக்கு ஐந்து சரக்கு லொறிகளில் நிவாரணப் பொருட்கள் வருகின்றன. அவற்றை பெறுவதற்கு தினமும் கூட்ட நெரிசல் ஏற்படுகிறது.

இந்த நிலையில், நுசைரத் அகதிகள் முகாமில் தண்ணீர் விநியோக இடத்தில் நேற்று முன்தினம் இஸ்ரேல் படையினர் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 20 குழந்தைகள் உட்பட 34 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் தொழில்நுட்பக் கோளாறால் ஏற்பட்டது என இஸ்ரேல் இராணுவம் கூறியுள்ளது. தற்போது இது குறித்து விசாரித்து வருவதாகவும் இஸ்ரேல் இராணுவம் விளக்கமளித்துள்ளது. (எ)

# இமாச்சலில் பருவமழைக்கு இதுவரை 98 பேர் உயிரிழப்பு

சிம்லா, ஜூலை 16

இந்தியாவின் இமாச்சலப் பிரதேசத்தில் பருவமழை தொடர்ந்து தீவிரமடைந்துள்ள நிலையில் கடந்த ஜூன் 20 முதல் ஜூலை 13 வரை மழை, வெள்ள பாதிப்புகள் காரணமாக மொத்தம் 98 பேர் உயிரிழந்ததாக மாநில பேரிடர் மேலாண்மை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இமாச்சல் அரசு நேற்று முன்தினம் காலை வெளியிட்ட அறிக்கையின்படி, மாநிலம் முழுவதும் மழை, வெள்ள பாதிப்புகளில் சிக்கி 98 பேர் இதுவரை உயிரிழந்தனர். இதில் 57 பேர் நிலச்சரிவுகள், திடீர் வெள்ளம் மற்றும் மேக வெடிப்புகள் போன்ற பேரிடர் பாதிப்புகளில் உயிரிழந்துள்ளனர். அதே நேரத்தில் 41 பேர் மழை காரணமாக ஏற்பட்ட வீதி விபத்துகளில் உயிரிழந்தனர்.

இதில் மேக வெடிப்புகளால் 15 பேர், நீரில் மூழ்கி 9 பேர், திடீர் வெள்ளத்தில் 8 பேர், பாம்புக் கடியால் 4 பேர், நிலச்சரிவு மற்றும் தீ விபத்தில் தலா ஒருவர், மின்சாரத் தாக்குதல் உள்ளிட்ட பிற காரணங்களால் 19 பேர் உயிரிழந்தனர். இந்த பருவமழையில் மண்டி மாவட்டம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. மண்டி மாவட்டத்தில் 21 பேர் மழை, வெள்ள பாதிப்புகளில் சிக்கி உயிரிழந்தனர், 27 பேர் காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# செவ்வாய்க்கிரக விண்கல் ஏலம்

நியூயோர்க், ஜூலை 16

25 கிலோ நிறை கொண்ட செவ்வாய்க்கிரக விண்கல் ஏலம் விடப்படவுள்ளது.

பூமியில் இதுவரை கண்டெடுக்கப்பட்டதில் மிகப்பெரிய அளவிலான விண்கல் நியூயோர்க்கில் உள்ள சோத்பீசில் ஏலத்துக்கு வருகிறது. கடந்த 2023ஆம் ஆண்டு இந்த அரிய வகை மற்றும் தூய்மையான விண்கல் நைஜரின் அகடெஸ் பகுதியில் கண்டெடுக்கப்பட்டது.

என். டபிள்யூ.ஏ. 16788 என அழைக்கப்படும் 24.67 கிலோ நிறையும், 15 அங்குல அகலமும் கொண்ட இந்த செவ்வாய்க்கிரக விண்கல் 2 மில்லியன் டொலர் முதல் 4 மில்லியன் டொலர் வரை ஏலம் போகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

செவ்வாய்க் கிரக மேற்பரப்பில் இந்த விண்கல் சிறு கோள்களுடன் மோதி வெடித்து சிதறி 140 மில்லியன் மைல்கள் கடந்து பூமியில் விழுந்ததாக சோத்பீசின் அறிவியல் இயற்கை வரலாற்றுத் துறை தலைவர் கசாண்ட்ராஹாட்டன் தெரிவித்தார்.

நியூயோர்க்கில் இன்று 16ஆம் திகதி இந்த விண்கல் ஏலம் நடைபெறவுள்ளது. (எ)

# காமராஜரின் உயரிய சிந்தனைகள் நமக்கு ஊக்கமளிக்கும்- பிரதமர் மோடி

புதுடில்லி, ஜூலை 16

காமராஜரின் உயரிய சிந்தனைகள் நமக்கு ஊக்கமளிக்கும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

காமராஜருக்கு மரியாதை செலுத்துவதாக பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டை 9 வருடங்கள் ஆட்சி செய்த பெருந்தலைவர்



காமராஜரின் 123ஆவது பிறந்த நாளான நேற்று கல்வி வளர்ச்சி


நாளாக கொண்டாடப்பட்டது. அரசியல் தலைவர்கள், காமராஜரின் புகழை போற்றி வருகின்றனர். இந்த நிலையில், காமராஜரின் பிறந்தநாளையொட்டி, பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருப்பதாவது "காமராஜரின் பிறந்த நாளில் அவருக்கு மரியாதை செலுத்துகிறேன். இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் முன்னணியில் இருந்த அவர், சுதந்திரத்துக்குப் பிந்தைய நமது பயணத்தின் வளர்ச்சிக்குரிய ஆண்டுகளில் விலைமதிப்பற்ற தலைமைத்துவத்தை வழங்கினார். அவரது உயரிய சிந்தனைகளும், சமூக நீதி குறித்த உறுதிப்பாடும் நம் அனைவருக்கும் மகத்தான ஊக்கமளிக்கும்"என்று மோடி பதிவிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# இறுதிவரை போராடிய இந்தியா இங்கிலாந்து அசத்தல் வெற்றி




லண்டன், ஜூலை 16

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் 2 போட்டிகளின் முடிவில் தொடர் 1-1 என்ற கணக்கில் சமனில் இருந்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி கடந்த 10ஆம் திகதி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் தொடங்கியது. இதில் முதல் இன்னிங்ஸில் இரு அணிகளும் தலா 387 ஓட்டங்கள் எடுத்தன. பின்னர் 2ஆவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 192 ஓட்டங்களுக்கு சுருண்டது. அதிகபட்சமாக ஜோ ரூட் 40 ஓட்டங்கள் அடித்தார். இந்தியா தரப்பில் வாஷிங்டன் சுந்தர் 4 விக்கெட்களும் ஜஸ்பிரித் பும்ரா, முகமது சிராஜ் தலா 2 விக்கெட்களும் கைப்பற்றினர்.

இதன் மூலம் இந்தியாவுக்கு 193 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் இலக்கை நோக்கி விளையாடிய இந்திய அணி 4ஆவது நாள் முடிவில் 17. 4 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 58 ஓட்டங்கள் அடித்திருந்தது. கே. எல். ராகுல் 33 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். இந்தியாவின் வெற்றிக்கு 135 ஓட்டங்கள் தேவை. அதே சமயம் இங்கிலாந்து வெற்றிக்கு 6 விக்கெட்கள் தேவை என்ற பரபரப்பான சூழலில் 5ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ரிஷப் பண்ட் - கே. எல். ராகுல் துடுப்பாட்டத்தை தொடங்கினர். ஆட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே இந்திய அணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ரிஷப் பண்ட் 9 ஓட்டங்களில் ஜோப்ரா ஆர்ச்சர் பந்துவீச்சில் விக்கெட்டை பறிகொடுத்தார். அடுத்து ரவீந்திர ஜடேஜா களமிறங்கினார். நிதானமாக ஆடிய கே. எல். ராகுல் 39 ஓட்டங்களில் வெளியேறினார்.

பின்வரிசை வீரர்களின் கணிசமான ஒத்துழைப்புடன் ஜடேஜா தனி ஆளாக போராடி அணிக்கு நம்பிக்கை அளித்தார். அடுத்து களமிறங்கிய நிதிஷ்குமார் ரெட்டி ஜடேஜாவுக்கு ஒத்துழைப்பு கொடுத்தார். இங்கிலாந்து பந்துவீச்சை ஓரளவு தாக்குப்பிடித்து விளையாடிய இந்த ஜோடி 30 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்த நிலையில் பிரிந்தது. நிதிஷ் ரெட்டி 13 ஓட்டங்களில் மதிய உணவு இடைவேளைக்கு முந்தைய ஓவரில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் 2ஆவது இன்னிங்ஸில் 74. 5 ஓவர்கள் தாக்குப்பிடித்த இந்திய அணி 170 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் இழந்தது. இதன் மூலம் இங்கிலாந்து அணி 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தனி ஆளாக போராடிய ஜடேஜா 61 ஓட்டங்களுடன் இறுதிவரை களத்தில் இருந்தார். இங்கிலாந்து தரப்பில் ஆர்ச்சர், பென் ஸ்டோக்ஸ் தலா 3 விக்கெட்களும், பிரைடன் கார்ஸ் 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 4ஆவது போட்டி 23ஆம் திகதி மான்செஸ்டரில் நடைபெறவுள்ளது.

(எ)




# வெறும் 27 ஓட்டங்களுக்கு சுருண்டது மே. இ. தீவுகள்

## டெஸ்ட் தொடர் ஆஸி. வசம்

ஜமைக்கா, ஜூலை 16

மூன்றாவது டெஸ்ட் போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் அணி வெறும் 27 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், அவுஸ்திரேலிய அணி டெஸ்ட் தொடரை முழுமையாக கைப்பற்றியது.

மேற்கு இந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட், 5 ரி -20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில், 2 டெஸ்ட்களில் அவுஸ்திரேலியா வென்ற நிலையில் இரு அணிகளுக்கும் இடையேயான 3ஆவது டெஸ்ட் ஜமைக்காவில் நடைபெற்றது.

இதையடுத்து, முதல் இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலிய அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 225 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியின் ஸ்டீவ் ஸ்மித் அதிகபட்சமாக 48 ஓட்டங்கள் சேர்த்தார். மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் அந்த அணியின் ஷமர் ஜோசப் 4 விக்கெட்களையும் ஜேடன் சீல்ஸ் 3 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணி 143 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் இழந்தது. ஜான் கேம்பெல் 36 ஓட்டங்கள் எடுத்தார். அவுஸ்திரேலியா தரப்பில் போலந்து 3 விக்கெட்கள் வீழ்த்தினார். இதையடுத்து 82 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலியா 2ஆம் நாள் முடிவில் 6 விக்கெட்களை இழந்து 99 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இதன் மூலம் 2ஆம் நாள் முடிவில் அவுஸ்திரேலியா 181 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. நேற்று முன்தினம் 3ஆம் நாள் ஆட்டம் நடைபெற்றது. இதில் தொடர்ந்து துடுப்பாட்டம் செய்த அவுஸ்திரேலியா 121 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. இதன் மூலம் மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு 204 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இந்த இலக்கை நோக்கி விளையாடிய மேற்கு இந்திய தீவுகள் அணியினர், அவுஸ்திரேலிய வீரர்களின் அபார பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தனர். வெறும் 14. 3 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த மேற்கு இந்திய தீவுகள் அணி 27 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

அவுஸ்திரேலியா தரப்பில் அபாரமாக பந்துவீசிய மிட்செல் ஸ்டார்க் 6 விக்கெட்களை அள்ளினார். இதன் மூலம் அவுஸ்திரேலிய அணி 176 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 3-0 என அவுஸ்திரேலியா முழுமையாக கைப்பற்றியது. (எ)

# சிம்பாவே அணியை வீழ்த்தி தென்னாபிரிக்கா வெற்றி

ஹராரே, ஜூலை 16

முதல் ரி - 20 போட்டியில் சிம்பாவே அணியை வீழ்த்தி தென்னாபிரிக்கா எளிதில் வெற்றி பெற்றது.

சிம்பாவே, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து ஆகிய 3 நாடுகள் பங்கேற்கும் ரி - 20 கிரிக்கெட் தொடர் சிம்பாவேயின் ஹராரே நகரில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா 2 முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறும்.

நேற்று முன்தினம் நடைபெற்ற தொடக்க ஆட்டத்தில் சிம்பாவே - தென்னாபிரிக்கா அணிகள் விளையாடின.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 141 ஓட்டங்கள் அடித்தது. அதிகபட்சமாக சிக்கந்தர் ராசா 54 ஓட்டங்கள் எடுத்தார். தென்னாபிரிக்கா தரப்பில் ஜார்ஜ் லிண்டே 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 142 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய தென்னாபிரிக்க அணி தொடக்கத்தில் விக்கெட்களை இழந்து தடுமாறியது.




இந்த இக்கட்டான சூழலில் கைகோர்த்த பிரெவிஸ் - ரூபின் ஹெர்மன் ஜோடி தென்னாபிரிக்க அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்து சென்றது. இதில் ஹெர்மன் நிதானமாக விளையாட பிரெவிஸ் அதிரடியில் பட்டையை கிளப்பினார். சிம்பாவே பந்துவீச்சை வெளுத்து வாங்கிய அவர் 17 பந்துகளில் 5 சிக்ஸர்கள் உட்பட 41 ஓட்டங்கள் அடித்து அணியின் வெற்றியை எளிதாக்கிய நிலையில் ஆட்டமிழந்தார். நிதானமாக ஆடிய ஹெர்மன் 45 ஓட்டங்களில் வெளியேறினார்.

அடுத்து வந்த கார்பின் போஷ் தனது பங்குக்கு 15 பந்துகளில் 23 ஓட்டங்கள் அடிக்க தென்னாபிரிக்க அணி 15. 5 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 142 ஓட்டங்கள் அடித்து எளிதில் வெற்றி பெற்றது. பிரெவிஸ் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (எ)

# ஹட்ரிக் விக்கெட் வீழ்த்திய ஆஸி வீரர் ஸ்காட் போலண்ட்

ஜமைக்கா, ஜூலை 16

மேற்கு இந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ஹட்ரிக் விக்கெட் வீழ்த்தி ஆஸி வீரர் ஸ்காட் போலண்ட் அசத்தினார்.

அவுஸ்திரேலியா - மேற்கு இந்திய தீவுகள் இடையேயான 3ஆவது டெஸ்ட் ஜமைக்காவில் நடைபெற்றது.

அவுஸ்திரேலியா தரப்பில் அபாரமாக பந்துவீசிய மிட்செல் ஸ்டார்க் 6 விக்கெட்களை அள்ளினார். அவரே ஆட்டநாயகன் விருதையும் வென்றார். இதன் மூலம் அவுஸ்திரேலிய அணி 176 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஸ்காட் போலண்ட் ஹட்ரிக் விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார். 26 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை மேற்கு இந்திய தீவுகள் அணி இழந்திருந்த நிலையில் தனது 2 ஆவது ஓவரை வீசிய போலண்ட் முதல் 3 பந்துகளிலும் விக்கெட் வீழ்த்தினார். ஜஸ்டின் கிரீவ்ஸ், ஷமர் ஜோசப், ஓரிகன் ஆகியோரின் விக்கெட்களை அவர் வீழ்த்தினார். இதன்மூலம் டெஸ்டில் ஹட்ரிக் விக்கெட் எடுத்த 10ஆவது அவுஸ்திரேலிய வீரர் என்ற பெருமையை போலண்ட் பெற்றுள்ளார். (எ)

# 100ஆவது டெஸ்ட் போட்டியில் ஸ்டார்க் பல்வேறு சாதனை

ஜமைக்கா, ஜூலை 16

100ஆவது டெஸ்ட் போட்டியில் ஆஸி வேகப்பந்து வீச்சாளர் ஸ்டார்க் பல்வேறு சாதனைகளை படைத்துள்ளார்.

அவுஸ்திரேலியா - மேற்கு இந்திய தீவுகள் இடையேயான 3ஆவது டெஸ்ட் ஜமைக்காவில் நடைபெற்றது.

அவுஸ்திரேலியா தரப்பில் அபாரமாக பந்துவீசிய மிட்செல் ஸ்டார்க் 6 விக்கெட்களை அள்ளினார். அவரே ஆட்டநாயகன் விருதையும் வென்றார். இதன் மூலம் அவுஸ்திரேலிய அணி 176 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

தனது 100ஆவது டெஸ்ட் போட்டியில் ஆட்டநாயகன் விருதை வென்ற ஸ்டார்க் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிவேகமாக (15 பந்துகளில்) 5 விக்கெட்கள் வீழ்த்திய வீரர் என்ற வரலாற்று சாதனையை ஸ்டார்க் படைத்தார். ஸ்டார்ட் வீசிய முதல் ஓவரில் 3 விக்கெட்களையும் 3ஆவது ஓவரின் முதல் 3 பந்துகளில் 2 விக்கெட்களையும் வீழ்த்தி இந்த சாதனையை அவர் படைத்துள்ளார்.




மேலும், மிட்செல் ஸ்டார்க் தனது 100ஆவது டெஸ்ட் போட்டியில் 400 விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார். இதன் மூலம் அவுஸ்திரேலியா சார்பில் டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்கள் வீழ்த்திய 2ஆவது வேகப் பந்து வீச்சாளர் என்ற சாதனையை படைத்தார். க்ளென் மெக்ராத் 563 விக்கெட்களை வீழ்த்தி முதல் இடத்தில் உள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளியன்று..

மேலும் பேச்சுகளைத் தொடங்குவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்தப் பயணம் உள்ளது" என்றும் அவர் இதன்போது கூறினார். (ஐ)

## வடக்கு...

ஆரம்பிக்கப்பட்ட போதிலும் எமது பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டதுடன் நாம் மீண்டும் எமது நிலங்களுக்கு செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

இதன்விளைவாக நாம் இடைத் தங்கல் முகாம்களிலும் எமது உறவினர்களின் வீடுகளிலுமே வசித்தோம். 2013ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம், காணி கையகப்படுத்தல் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவின்கீழ் விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக எமக்குச் சொந்தமான பரந்துபட்டளவிலான காணிகளை கையகப்படுத்தியது. அவ்வாறு கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் எமது பூர்வீகக் காணிகள், வாழ்வாதார வளங்கள், விவசாய காணிகள், மீன்பிடி பகுதிகள், மத வணக்க ஸ்தலங்கள் என்பன உள்ளன. இவ்வாறானதொரு பின்னணியில் ஜனநாயகத்தையும் நல்லிணக்கத்தையும் மேம்படுத்துவதாக வாக்குறுதியளித்து ஆட்சிப் பீடமேறிய உங்களது அரசாங்கம், காணி உள்ளிட்ட விடயங்களில் முன்னைய அரசாங்கங்களின் கொள்கைகளையே பின்பற்றுவது மக்கள் வழங்கிய ஆணையை புறக்கணிக்கும் செயலாகும். எனவே இதுகுறித்து உடனடியாக அவதானம் செலுத்தி, எமது பாரம்பரிய நிலங்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்", என்று கோரப்பட்டுள்ளது.

நேற்றைய இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் பங்கேற்றிருந்தார். (ஐ)

## கட்டுப்படுத்த...

மன்னார் - முசலி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

இந்திய இழுவைப் படகுகள் எமது வடபகுதி கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து எமது மீனவரின் வாழ்வாதாரத்தை சூறையாடிச் செல்கின்றன. இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்கவேண்டிய கடற்படையினரும் ஆட்சியாளர்களும் தொடர்ச்சியாகக் காரணங்களை மாத்திரம் சொல்கின்ற நிலையே காணப்படுகிறது.

அரசாங்கம் இந்த விடயத்தில் கூடிய கரிசனையுடன் செயல்பட்டு இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன், கடற்படையினர் இந்திய மீனவர்களின் இந்த அத்துமீறலைத் தடுப்பதற்கு டோறா படகுகள் வேண்டுமென காரணங்களை இங்கு கூறிக்கொண்டிருக்கக் கூடாது.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி உள்நுழைந்து திருட்டு வேலைகளில் ஈடுபடும் இந்திய இழுவைப் படகுகளுக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இந்திய மீனவர்களுடைய இத்தகைய அத்துமீறல்களுக்கு இந்திய, இலங்கை அரசுகள் ஆதரவளிக்கின்றன என்றே எம்மால் பார்க்கமுடிகிறது. இந்த விடயத்தில் கடற்படையினர்மீது மீனவ மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

இந்த அத்துமீறிய செயல்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டிய முழுப்பொறுப்பும் கடற்படையினருக்கு இருக்கின்றது. எமது மக்களை காப்பாற்ற முடியவில்லையெனில் எமது பகுதிகளில் படையினர் எதற்கு இருக்கின்றனர்? படையினரால் இந்த அத்துமீறல் செயல்பாட்டைக் கட்டுப்படுத்த முடியவில்லையெனில், எமது மக்களிடம் அந்தப் பொறுப்பை மக்களிடம் வழங்குங்கள் - என்றார். (ஐ)

## உடைந்தது...

தெரிவிக்கப்பட்டது. எனவே, முல்லைத்தீவு நகர பகுதிக்கு செல்வோரை புதுக்குடியிருப்பு - கேப்பாபிலவு வீதியை பயன்படுத்துமா றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு மக்களுக்கு அறிவித்துள்ளது.

வட்டுவாகல் பாலம் முல்லைத்தீவு நகரையும் புதுக்குடியிருப்பையும் நந்திக்கடல் களப்பை ஊடறுத்து இணைக்கிறது. சுமார் 410 மீற்றர் நீளம் கொண்ட இந்தப் பாலம் இறுதிப் போர் காலத்திலும் சுனாமி பேரழிவின் போதும் கடுமையாக சேதமடைந்திருந்தது. இந்தப் பாலத்தை திருத்தியமைப்பதற்கு 100 கோடி ரூபாய் இந்த ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## போர்...

உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

வலி. வடக்கு காணிகளை விடுவிக்கக் கோரி ஜனாதிபதி செயலகம் முன்பாக நேற்று நடத்தப்பட்ட போராட்டத்தில் பங்கேற்று கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதியுயர் பாதுகாப்பு வலயம் என தெரிவித்து தனியார் காணிகள் எத்தனையோ ஏக்கர் கணக்கில் பிடிக்கப்பட்டுள்ளது. யாழ். குடாநாட்டை பொறுத்தவரை அதன் 30 வீதமான நிலப்பரப்பு அதியுயர் பாதுகாப்பு வலயம் என்று தெரிவித்து சட்டவிரோதமாக சட்ட ஏற்பாடுகள் எதுவுமின்றி கைப்பற்றி வைத்துள்ளது.

அரசாங்கம் கைப்பற்றி வைத்திருப்பதற்கான சட்ட ஒழுங்குகள் எதுவுமின்றி தொடர்ந்தும் அந்த நிலங்களை வைத்திருக்கிறது. சமாதான முயற்சிகளின் போது இந்த விவகாரம் பெரிய பிரச்சினையாக வெடித்த போது சிறீ லங்கா அரசாங்கம் நம்பியார் என்ற இந்திய இராணுவ அதிகாரியின் ஏற்பாட்டில் - அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பில் மாற்றங்களை செய்வதற்கு அவருடைய ஆலோசனைகளை பெற்று அதன்படி செயல்படப்போவதாக அறிவித்திருந்தது.

நம்பியாருடைய அறிக்கையை எடுத்துப் பார்த்தால் - அது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இருக்கிற வரைக்கும் அல்லது தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்துக்கு எறிகணை தாக்கு தலை மேற்கொள்வதற்கான திறன் இருக் கின்ற வரைக்கும் உயர் பாதுகாப்பு வலயங்களில் பெரிய அளவில் மாற்றங்களை செய்ய முடியாது என்று தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலை புலிகள் இயக்கம் இல்லாமல் போனால் அல்லது இந்த எறிகணை காரணமாக ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் இல்லாமல் போனால் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அனைத்தையும் அகற்றலாம் என்றும் அந்த அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

இன்றைக்கு போர் முடிந்து 16 வருடங்களாகின்றன. ஆனால், இன்றைக்கும் அந்த அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற போலியான சட்டவிரோதமான கட்டமைப்புகளை தொடர்ந்தும் தக்க வைத்து பாதிக்கப்பட்ட சாதாரண தமிழ் மக்களுக்கு தங்களின் சொந்த காணி நிலைக்கு திரும்பி போகமுடியாத நிலைக்கு இந்த அரசும் இதற்கு முதல் இருந்த அரசும் வைத்திருப்பது உண்மையில் ஏற்றுக்கொள்ள முடியாத பெரும் குற்றமாகும்.

எங்களை பொறுத்தவரையிலே தெற்கிலே அவ்வாறான ஒரு மோசமான செயல்பாடு நடைபெற்றதாக இருந்தால் இன்று, அந்த அரசாங்கம் அடித்துத் துரத்தப்பட்டிருக்கும். தொடர்ந்தும், வட - கிழக்கிலே எந்த விதமான நியாயமும் இல்லாமல் அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பொதுமக்களின் காணிகளை பறித்து வைத்திருப்பது முற்றிலும் தவறான ஒரு செயல் - என்றார். (ஐ)

## மாகாண சபை...

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

அரச இயந்திரத்தின்கீழ் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட கட்டமைப்புகளில் மாகாண சபைகள் தவிர்ந்த ஏனைய சகல கட்டமைப்புகளும் தற்போது இயங்கு நிலையில் உள்ளன. இந்தப் பின்னணியில், மாகாண சபைகளை தொடர்ந்தும் நிறைவேற்றதிகார நிர்வாகத்தின்கீழ் வைத்து மக்கள் பிரதிநிதிகளின் தெரிவை முடக்குவது என்பது அரசமைப்புக்கு முரணானது மாத்திரமன்றி மக்களின் ஆணை வழங்கல் அதிகாரத்தையும் பறிப்பதாகவே அமையும்.

ஜனநாயகத்தை நேசிக்கும் அனைவரும் இந்த விடயம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தவேண்டும். இதற்கமைய மாகாண சபைகள் தேர்தலை உடனடியாக நடாத்துவதற்கு நடவ டிக்கை எடுக்குமாறு வலியுறுத்துகி றோம்.

மாகாண சபைகள் தேர்தல் இறுதியாக 2014ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன. இதன்படி, 2018 ஆம் ஆண்டிலிருந்து இப்போது வரை நாட்டிலுள்ள எந்தவொரு மாகாண சபையிலும் மக்கள் பிரதிநிதித்துவம் இல்லை. மாறாக, ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆளுநரின் கீழான நிர்வாகமே தற்போது நடக்கிறது. இது ஜனநாயகத்துக்கு முற்றிலும் விரோதமானதாகும்.

அதுமாத்திரமின்றி, நாட்டின் தேசிய இனப் பிரச்னைக்குத் தீர்வு கோரி வரும் மக்களின் அபிலாசைகளைக் கருத்தில் கொண்டு நோக்குகையில், இது மிக மோசமான நிலைமையாகும். இவ்வாறானதொரு பின்னணியில் மாகாண சபைகள் தேர்தல் முறைமையில் நிலவும் சிக்கல் குறித்து அவதானம் செலுத்த வேண்டியது மிக அவசியமாகும். அதில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான யோசனை பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதை மறந்துவிடக்கூடாது.

அதுமாத்திரமின்றி தேவையேற்படின், ஜனாதிபதி விசேட ஆணைக்குழு ஒன்றை நியமித்து பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ளலாம். எது எப்படி இருப்பினும், உரிய காலப்பகுதியில் நடத்தப்படவேண்டிய மாகாண சபைகள் தேர்தலை காலந்தாழ்த்துவதற் கான காரணமாகப் பயன்படுத்தக் கூடாது - என்றுள்ளது. (ஐ)

## தேர்தல்...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை நேற்று நடந்த ஊடக சந்திப்பில், வெரிடேச் ரிசேர்ச் நிறுவனம் அண்மையில் வெளியிட்ட அறிக்கை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

மேலும், வழங்கப்பட்ட பல வாக்குறுதிகளில் தெரிவு செய்யப்பட்ட வாக்குறுதிகளை மாத்திரம் தொகுத்து அவற்றில் ஒரு வாக்குறுதி மாத்திரம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று குறிப்பிடுவது எந்தளவுக்கு நியாயமா னது.

எமது தேர்தல் விஞ்ஞாபனத்தின் குறிப்பிட்ட விடயங்களுக்கு அமைவாகவே நாங்கள் செயல்படுகிறோம். கடந்த 09 மாத காலப் பகுதியில் பல விடயங்களை செயல் படுத்தியுள்ளோம். மக்களுக்கு வழங்கிய கொள்கை மாதிரிக்கு புறம்பாக நாங்கள் செயல்படவில்லை. - என்றார். (ஐ)

## எதிர்க்கட்சிகள்...

தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைமை பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், அரசாங்கம் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் நெருங்கியுள்ளது. அரசாங்கம் தேர்தல் காலத்திலும் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் எந்தளவு நிறைவேற்றியிருக்கிறது என்பது தொடர்பில் சுயாதீன ஆய்வு நிறுவனமான வெரிடேர்ச் ஆய்வு நிறுவனம் ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளது. இதன் பிரகாரம் குறித்த ஆய்வு நிறுவனம் தயாரித்துள்ள அநுர மீற்றர் தளத்தில், அரசாங்கம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் 100 இற்கு 5 சதவீதமே நிறைவேற்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை நம்பி வாக்களித்த மக்களை ஏமாற்றி இருப்பது தெளிவாகிறது. அரசாங்கம் தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்குவதாகத் தெரிவித்த எதனையும் வழங்கவில்லை. இதேநேரம் செய்ய மாட்டோம் என்ற விடயங்களையே அதிகம் செய்துள்ளது. குறிப்பாக மக்களின் வாழ்க்கைச் செலவை குறைக்கும் வகையில் அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைப்பதாக தெரிவித்தி ருந்தது. இதேபோன்று மக்கள்மீது சுமத்தப்பட்டிருக்கும் தேவையற்ற வரிகளை இல்லாமலாக்குவதாக தெரிவித்திருந்தது.

ஆனால், இன்று மக்களுக்கு வாழ்க்கைச் செலவை தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று வரிகளை அதிகரித்துள்ளது மாத்திரமன்றி புதிய வரிகளையும் அறிமுகப்படுத்தி மக்கள் மீது சுமைகளை அதிகரித்துள்ளது. இதனால் இந்த அரசாங்கம் ஒரு தவணை காலமே ஆட்சியில் இருக்கும். அடுத்த தேர்தலில் அரசாங்கத்தை தோற்கடிப்போம். எமது கட்சியில் ஏற்பட்ட பிளவு காரணமாகவே அநுர குமார திஸாநாயக்க வெற்றி பெற முடிந்தது. இவ்வாறான நிலை எதிர்காலத்தில் ஏற்படாமல் நாங்கள் பாதுகாப்போம். எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டு அடுத்த தேர்தலில் வெற்றிபெற நடவடிக்கை எடுப்போம் - என்றார். (ஐ)

## 9மாதங்களின்...

2024 ஒக்ரோபர் 24ஆம் திகதி தெகிவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

நேற்றைய தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மன்றில் முற்பட்ட தெகிவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சந்தேகநபரை பிணையில் விடுவிக்குமாறு அறிவுறுத்திய சட்டமா அதிபரின் பரிந்துரையை நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

இதையடுத்து, சந்தேகநபரை பிணையில் விடுவித்த நீதிவான், வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் 16ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

முஹமது சுஹைல் அடையாள அட்டை வைத்திருக்காததால் கைது செய்யப்பட்டார் என்றும் இஸ்ரேல் எதிர்ப்பு ஸ்ரிக்கர் ஒட்டினார் எனவும் கூறப்பட்டது. பின்னர், இஸ்ரேல் நாட்டின் தேசிய கொடியை காலால் மிதிக்கும் படத்தை சமூகவலைத்தளத்தில் பதிவிட்டமைக்காக கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அமெரிக்க....

நாடுகளுடன் போட்டியிட மேலும் வரி குறைப்பு தேவை என்று அது நம்புகிறது.

இரு நாடுகளும் பேச்சு நடத்தி ஒகஸ்ட் முதலாம் திகதி வரை அமெரிக்கா அவகாசம் வழங்கியுள்ளது. இந்த நிலையில், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான கூட்டத்தில் அமெரிக்க தீர்வை வரி தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போது, அமெரிக்காவுடனான வர்த்தகத்தில் புதிய விதிமுறைகளை அனுசரிக்கும்போது நாட்டின் இறையாண்மையை பாதிக்கும் எதையும் சமரசம் செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஜனாதிபதி நிராகரித்தார். எனினும், குழு ஒன்றை பேச்சு நடத்த அமெரிக்காவுக்கு அனுப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு இலங்கை கிட்டத்தட்ட 300 கோடி டொலர் மதிப்புள்ள பொருட்களை ஏற்றுமதி செய்கிறது. இதில், 120 கோடி டொலர்கள் ஆடைகளாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அமெரிக்காவுடன் பேச்சு தொடரும்!

## இலங்கை அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 16

வரித் திருத்தங்களை மேலும் முன்னோக்கி கொண்டுசெல்ல அரசாங்கம் எதிர்பார்ப்பதாக அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கமாக அமெரிக்காவுடன் பேச்சுகளை நடத்தி வருகிறோம். அமெரிக்காவின் செனட் சபையில் அல்லது அரசாங்கத்தில் எமது நண்பர்கள் இருக்கிறார்கள் என இதனை செய்ய முடியாது. இதனை நடைமுறைப்படுத்தும் நிறுவனமொன்று அங்கு உள்ளது. அவர்களுடன் முன்னேற்றகரமான பேச்சுகளை ஆரம்பித்துள்ளோம்.

இதன் அடிப்படையில் முன்னோக்கி செல்ல முடியும். இறுதி பேச்சுகளின் பிரதிபலன் என்ன என தற்போது கூற முடியாது. இதனையும் விட முன்னோக்கிய சிறந்த வரித்திட்டமொன்றுக்கு செல்ல முடியும் என எதிர்பார்க்கிறோம்-என்றார். (அ)

# கொலையில் முடிந்த தகராறு!

கொழும்பு, ஜூலை 16

இரத்தினபுரியில் நிவித்திகல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தம்மோருவ சந்தி பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளை ஞர் ஒருவர் கொலை செய்யப்பட் டுள்ளதாக நிவித்திகல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலை சம்பவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொலம்பகம, நிவித்திகல பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய இளைஞனே கொலை செய்யப்பட் டுள்ளதாக பொலிஸார் தெரிவித் தனர்.

கொலை செய்யப்பட்ட இளை ஞனுக்கும் மூன்று நபர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# பல்வேறு சட்ட சிக்கலில் மாகாண சபைத் தேர்தல்!

கொழும்பு, ஜூலை 16



பல்வேறு சட்ட சிக்கல்கள் காரணமாக மாகாண சபைத் தேர்தலை நடத்த சிறிது காலம் எடுக்கும் என்றும் தேர்தல் ஆணையகம் மாகாண சபைத் தேர்தலை நடத்த இன்னும் தயாராக இல்லை என்று ஆணையகத்தின் தலைவர்கள் தெரிவித்தனர்.

தேர்தல் ஆணைக்குழு தலைவர் ஆனந்த ரத்நாயக்க இதுதொடர்பில் தெரிவிக்கையில்-

மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு முன்பு பல புதிய சட்டங்கள் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படுவது மிகவும் அவசியம்.

அந்தச் சட்டங்கள் நிறைவேற்றப்படும் வரை தேர்தலை நடத்துவது சாத்தியமில்லை.

பழைய முறையின் கீழ் (விகிதாசார) வாக்களிப்புக்கு ஏற்பாடு செய்யும் வகையில் சட்டம் திருத்தப்பட வேண்டும். இல்லையெனில், எல்லை நிர்ணயம் தேவைக்கேற்ப செய்யப்பட வேண்டும்.

பழைய முறையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான தனிநபர் மசோதாவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் சமீபத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கொழும்பு வைத்தியசாலை பதில் பணிப்பாளரை விரட்டியடித்துவிட்டு கதிரையில் உட்கார்ந்த பெண்!

கொழும்பு, ஜூலை 16

கொழும்பு தேசிய மருத்துவமனையின் பதில் பணிப்பாளரின் அலுவலகத்திற்குள் வலுக்கட்டாயமாக நுழைந்து அவரது நாற்காலியில் அமர்ந்த பெண் ஒருவர் மனநல சிகிச்சைக்காக மருத்துவமனையின் 59ஆவது விடுதியில் அனுமதிக்கப்பட்டதாக மருத்துவமனை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

குறித்த பெண் தெஹிவளை பகுதியில் உள்ள ஒரு சுகாதார நிறுவனத்தில் பணிபுரியும் மருத்துவர் என்பது பின்னர் உறுதிப்படுத்தப்பட்டதாக மருத்துவமனை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

நேற்று முன் தினம் காலை 10 மணியளவில் தேசிய மருத்துவமனையின் பதில் பணிப்பாளரின் அலுவலகத்திற்கு வந்த அந்த பெண், பதில் பணிப்பாளரை அச்சுறுத்தியதாகவும், பதில் பணிப்பாளர் அந்த இடத்தை விட்டு வெளியேறிவிட்டதாகவும் மருத்துவமனை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

பதில் பணிப்பாளர் தனது இருக்கையை விட்டு வெளியேறியவுடன், சம்பந்தப்பட்ட மருத்துவர் அந்த இருக்கையில் அமர்ந்து, தனது கடமைகளை முறையாகச் செய்ய முடியாவிட்டால் இராஜினாமா செய்யுமாறு கத்திக்கொண்டிருந்தார் என்று மருத்துவமனை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

மருத்துவமனை அதிகாரிகள் வந்து மருத்துவரை தேசிய மருத்துவமனையின் மனநல சிகிச்சைப் பிரிவுக்கு அழைத்துச் சென்றனர். அவருக்கு மனநலப் பிரச்சினை உள்ளதா என்பதைக் கண்டறிய விசாரணைகள் நடைபெற்று வருவதாக மருத்துவமனை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். (அ)

# ரணிலின் தீர்மானத்துக்கு எதிர்க்கட்சி கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை

ஆளும் கட்சிக்கு பெரும்பான்மை இல்லாத உள்ளூராட்சி நிறுவனங்களில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக, அனைத்து எதிர்க்கட்சிகளையும் இணைக்க முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்த நடவடிக்கைக்கு பல கட்சித் தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

பேருவளை மாநகர சபையில் அதிகாரத்தைப் பெறுவதற்காக ஐக்கிய மக்கள் சக்தி, திசைகாட்டியுடன் இணைந்ததே இதற்குக் காரணம்.

நேற்று முன் தினம் மாலை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அவரது அலுவலகத்தில் சந்தித்தபோது இந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியதாக முன்னாள் ஜனாதிபதியின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் குறித்து அதிருப்தி தெரிவித்து வரும் கூட்டு எதிர்க்கட்சித் தலைவர்கள், முன்னாள் ஜனாதிபதி எதிர்க்கட்சிகளை இணைக்க எடுத்த நடவடிக்கையால் தங்கள் கட்சிகளும் பெரும் அசௌகரியத்தில் உள்ளதாகக் கூறியுள்ளனர்.

மத்திய கலாசார நிதியத்தில் நடந்ததாகக் கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க அமைச்சரவை துணைக் குழு நியமிக்கப்பட்ட பின்னர், ஐக்கிய மக்கள் சக்தி, அரசாங்கத்துக்கு மிகவும் கீழ்ப்படிந்துவிட்டதாக கூட்டு எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரடியாகக் கூறியுள்ளார். (அ)

# இலங்கை முழுவதும் இணையவழியில் நேரடியாக அபராதம் செலுத்தும் வசதி

கொழும்பு, ஜூலை 16

இலங்கை முழுவதும் இணையவழியில் நேரடியாக அபராதம் செலுத்தும் வசதி செயல்படுத்தப்படவுள்ளதாக தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஹர்ஷ புரசிங்க அறிவித்துள்ளார்.

டிஜிற்றல் பொருளாதார அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் இந்த வசதி நடைமுறைக்கு வரவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சில வாரங்களுக்கு முன்பு, எங்களுக்கு அமைச்சரவை ஒப்புதல் கிடைத்தது. எனவே இந்த மாத இறுதிக்குள் மேல் மற்றும் தென் மாகாணங்கள் ஆகிய இரண்டு மாகாணங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களை இணைப்பதன் மூலம் முதல் கட்டமாக இந்த திட்டத்தை அறிமுகப்படுத்த முடியும் என நாங்கள் நம்புகிறோம்.

அதன் பிறகு, மிக விரைவான திட்டத்தின் கீழ், செப்டெம்பர் மாதத்திற்குள் நாடு முழுவதும் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களையும் உள்ளடக்கி நேரடியாக அபராதம் செலுத்தும் முறையை நடைமுறைப்படுத் துவோம்-என்றார். (அ)

# வடமத்திய மாகாண சபைக்குச் செயலாளராக யாழ்ப்பாணத்தை சேர்ந்த சுபாஜினி மதியழகன்!

யாழ்ப்பாணம், ஜூலை 16

வட மத்திய மாகாண சபைக்கு முதலாவது தமிழ் பெண் செயலாளராக யாழ்ப்பாணத்தை சேர்ந்த நிர்வாக சேவை அதிகாரியான சுபாஜினி மதியழகன் தனது கடமைகளை நேற்று முன் தினம் திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.



சண்டிலிப்பாய் பிரதேச செயலாளராக கடமையாற்றிய சுபாஜினி நிர்வாக சேவை சிறப்பு தரத்துக்கு பதவி உயர்வு பெற்ற நிலையில் வட மத்திய மாகாண சபைக்கு செயலாளராக நியமிக்கப்பட்டார்.

இவ்வாறு நியமனம் பெற்ற அவருக்கு பல்வேறு தரப்பினரும் தமது பாராட்டுகளை தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

# கடவுச்சீட்டு விண்ணப்பம் மிகவிரைவில் புதிய திட்டம்

கொழும்பு, ஜூலை 16

இந்த ஆண்டு முதல் வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்கள் மூலம் கடவுச்சீட்டுகளுக்கு இணையத்தில் விண்ணப்பிக்கும் திட்டத்தை செயற்படுத்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்கள் மற்றும் அலுவலகங்கள் மூலம் அங்குள்ள இலங்கையர்களின் கடவுச்சீட்டுகளுக்கான இணைய விண்ணப்ப செயல்முறையை எளிதாக்குவதற்காக சர்வதேச இடம்பெயர்வு அமைப்புக்கு ஒரு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த திட்டத்துக்கு தேவையான தொழில்நுட்ப ஆதரவை வழங்குவதற்கும், அதனை செயல்படுத்த தேவையான நிதியை வழங்கவும் சர்வதேச இடம்பெயர்வு அமைப்பு ஒப்புக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ... லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் ... அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org